




# 1

அந்தத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் வாடிக்கையாளர்களுக்கான வியாபார நேரம் முடிந்து போயிருந்தது. சாப்பாட்டு அறையில் வங்கிப் பணியாளர்கள் பலரும் அவரவர் கொண்டு வந்திருந்த உணவுகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சாப்பிட்டு முடிந்து உஷா, கை அலம்பிக் கொண்டிருந்தபோது தாமரைச் செல்வன் அவளின் அருகில் வந்தான். உஷா சுற்றிலும் ஒருமுறை பார்த்தாள். குறிப்பிடும்படியான பார்வையில் யாரும் அவளைக் கவனிக்கவில்லை. தாமரைச்செல்வன் உஷாவிடம் தணிந்த குரலில் சொன்னான்:

''இன்னிக்கி ஈவினிங் நாம் மீட் பண்ணணும் உஷா.''

''இன்னிக்கா?'' உஷா சிறிது தயக்கத்துடன் கேட்டாள்.

''எங்க அம்மா உன்கிட்டே சில விஷயங்கள் பேசச் சொன்னாங்க.''

''எதுவும் சீரியஸ் மேட்டரா?''

''அம்மாவையும் என்னையும் பொறுத்தவரைக்கும் சீரியஸ்.''

''சரி. மீட் பண்ணுவோம். உங்க வீட்டுக்கே போயிடலாமா?''

''எங்க வீட்டுக்கு வேண்டாம். ஊர்ல

இருந்து அத்தை வந்திருக்காங்க. வீட்டுக்குப் போனா அவங்க முன்னாடிதான் உட்கார்ந்து பேசணும். அது சரிப்படாது. நாம் பார்க்குக்குப் போயிடலாம்...''

''ஆனா இன்னிக்கு ரொம்ப நேரமெல்லாம் உட்கார்ந்து பேச வேண்டாம். வீட்ல போய் எனக்கு இன்னிக்கி சமையல் பண்ற வேலை இருக்கு. எங்க அம்மா அசோக்நகர் போயிருக்காங்க. நைட் ஆகும் - அவங்க வர்றதுக்கு.''

''ரொம்ப லேட் ஆகாது. நீ அரைமணி நேரம் இருந்தா போதும்...''

''நான் நாலு மணிக்குக் கிளம்பி பாண்டி பஜார் ஸ்டாப்ல போய் நிக்கறேன்.''

''நான் நாலே காலுக்கு வர்றேன். நடேசன் பார்க் போயிடுவோம்.''

''சரி.''

''இந்த ஞாயிற்றுக்கிழமை 'குணா' போகலாமா உஷா?''

''ஞாயிற்றுக்கிழமை எனக்குப் புரொக்ராம் இருக்கு தாமரை. மாங்காடு போறேன்.''

''யார்கூட?''

''எங்க அம்மா, நான், என் தம்பி.''

''அப்ப 'குணா' அடுத்த வாரம் பார்ப்போம். அந்தப் படத்தை உன்கூட சேர்ந்து பார்க்கணும்னு நெனைச்சிட்டு இருக்கேன்.''

''சரி. நாலு மணிக்கு பாண்டி பஜார்ல பார்ப்போம். சித்ரா அங்கேயிருந்து நம்மையே



பார்க்கிறா...''

''அவளுக்கு வேற வேலை?''

## 2

மாலை நாலரை மணிக்கு தாமரைச் செல்வனும் உஷாவும் நடேசன் பார்க்கில் கூந்தல்பனை மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார்கள். தாமரைச் செல்வன் சொன்னான்:

''நேத்துச் சாயந்தரம் அம்மா பாத்ரூம்ல விழுந்துட்டாங்க உஷா...''

''அய்யய்யோ.....அப்புறம்?'' உஷா பதட்டத்துடன் கேட்டாள்.

''அதிர்ஷ்டவசமா எலும்பு முறிவு எதுவும் இல்லை. ஆனா ரத்தக் கொதிப்பு நூத்தித் தொண்ணூறு. கீழே விழுந்ததில் ரொம்ப டென்ஷன் ஆயிட்டாங்க...டாக்டர் அம்மாவை ரெஸ்ட்டா இருக்கச் சொல்லியிருக்கார்...''

''ஏன் இதை நீங்க பேங்க்லேயே சொல்லலை? இங்கே வந்ததும் அம்மாவைப் போய் பார்த்திருக்கலாமே...''

''ஊர்லே இருந்து அத்தை வந்திருக்காங்கன்னு சொன்னேனே...!''

''அத்தை வந்திருந்தா என்ன?''

''இல்லை உஷா; இப்ப உன்னை எங்க சொந்தக்காரங்க யாரும் பாக்கறதை அம்மா

விரும்பலை...''

''நம்மைவிட உங்க அம்மா ரொம்ப எச்சரிக்கையா இருக்காங்க. ஆனா அம்மாவுக்கு இவ்வளவு எச்சரிக்கையான பயம் வேண்டாம் என்கிறதுதான் என்னோட அபிப்பிரயாம்...''

''உன் அப்பாவும் அம்மாவும் சம்மதம் சொல்லி; நம்ம கல்யாணம் நிச்சயமாகிற வரைக்கும் அம்மாவுக்குப் பயம்தான்...''

''சரி; அம்மா இப்ப எப்படி இருக்காங்க?''

''பெட்டர்...''

''என்கிட்டே உங்க அம்மா என்ன பேசச் சொன்னாங்க - இத்தனை அவசரமா?''

''நம்ம கல்யாணத்தை எவ்வளவு சீக்கிரம் வச்சிடணுமோ அவ்வளவு சீக்கிரம் வச்சிடணும்னு அம்மா ஆசைப்படறாங்க உஷா. அதனால நீ இதுக்கு மேலேயும் நம் காதல் விஷயத்தை உங்க வீட்ல சொல்லாமே இருக்கறது சரியில்லை. நீ உடனே உங்க அப்பாகிட்டே பேசி நம்ம கல்யாணத்தைச் சீக்கிரமா நடத்தறதுக்கு ஏற்பாடு செய்தாகணும். என்ன சொல்றே...?''

உஷா உடனே இதற்குப் பதில் சொல்லவில்லை. புல்வெளியில் திரிந்த அணில்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன கம்னு இருக்கே?''-தாமரைச் செல்வன் தொடர்ந்து கேட்டான்.

''அம்மா ஏதாவது அவர்களுக்கு ஆயுடும்னு பயப்படறாங்களா?'' உஷா ஒரு புல்லை



பற்களால் கடித்தவாறே கேட்டாள்.

''அந்தப் பயம் இருக்கிற மாதிரி தெரியலை. ஆனா, ஒரு தினுசா வாழ்க்கையில் களைச்சிப் போயிட்டாங்க... என் ரெண்டு தங்கச்சிகளும் கல்யாணமாகிப்போன பிறகு வீட்ல அம்மாவுக்குப் பெண் துணை இல்லை பார் - அந்தத் தனிமையைத் தாங்க முடியல அவங்களால...அதனால்; சீக்கிரமா தனக்கு மருமகள் வந்தா தேவலைன்னு நெனைக்கறாங்க...அதுவும் நேத்து பாத்ரூம்ல எதிர்பாராமே விழுந்ததும் மருமகளோட பணிவிடை வேணும்னு ஏங்கவே ஆரம்பிச்சிட்டாங்க. உடனே உன்னை உங்க அப்பாகிட்டே பேசி சீக்கிரமா கல்யாணத்தை நிச்சயம் பண்ணச் சொன்னாங்க. ஸோ-நீ உடனே உங்க வீட்ல நம் விஷயத்தைச் சொல்லிடறது நல்லது.''

''நான் இன்னும் ஆறு மாதம் போகட்டும்னு நெனைச்சேன்.''

''மூணு மாசத்துக்குள்ள நம்ம கல்யாணம் முடிஞ்சிடறது தான் நல்லது''

''ரெண்டு வருஷந்தானே ஆகுது என் அக்காவோட கல்யாணம் முடிஞ்சி... அப்பாவும் ஜூன் மாதம் தொடங்கினதும் எனக்கு வரன் பார்க்க ஆரம்பிக்கலாம்னு இருக்கார். வரன் பார்க்க ஆரம்பிக்கும்போது சொல்லலாம்னு இருந்தேன்...''

''அது தெரிஞ்சித்தான் நானும் பேசாமே இருந்தேன். ஆனா-இப்ப என் அம்மாவுக்காக உடனடியா உன் அப்பாகிட்டே மேட்டரைப்

பேசிட்டவேண்டிய கட்டாயம் வச்சிருச்சி...''

உஷா மௌனமாக இருந்தாள்.

''பயமா இருக்கா?'' தாமரைச் செல்வன் கேட்டான்.

''தயக்கமா இருக்கு.''

''என்னைக்கி இருந்தாலும் பேச வேண்டிய விஷயம் தானே...''

''எங்க வீட்ல கற்பனைகூடப் பண்ணிப் பாத்திருக்கமாட்டாங்க - என் மனசுக்குள் இப்படி ஒரு காதல் உறவு இருக்கும்னு...''

''அது உனக்கு எப்படித் தெரியும்? இந்தக் காலத்ல எல்லாப் பெற்றோர்களுக்கும் தங்கள் பிள்ளைகளைப் பத்தி பயம் இருக்கத்தான் செய்யும், என்னா-இன்னிக்கி அப்படி இருக்கு லைஃப்....''

''இல்லைங்க தாமரை. என் அப்பா அம்மாவுக்கு என்னைப் பத்தி அப்படிப்பட்ட பயம் கொஞ்சம்கூட இருக்காது. அதனாலதான் எனக்குத் தயக்கமா இருக்கு.''

''அப்படின்னா தப்பு உன் மேலதான். அந்த மாதிரியான பயம் உன்மேல இருக்கிற மாதிரி ஆரம்பத்தில் இருந்தே நீ அவங்கக்கிட்டே நடந்து வந்திருக்கணும்!''

''நல்லாத்தான் இருக்கு-நீங்க சொல்றது... எனக்கென்ன ஜோசியமா தெரியும் - இப்படியெல்லாம் காதல் வசப்படுவேன்னு...!''

''இனிமே என்ன பண்ண முடியும்? காதல் வசப்பட்டாச்சி...! இனி அதுக்கு என்ன பண்ணணுமோ - அதையும் பண்ணு.



எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி சும்மா காதலிச்சிக்கிட்டே இருக்கிறது...?'' தாமரைச செல்வன் கேட்டான்.

''இன்னும் ஆறே ஆறு மாசம் பொறுத்துக் கொள்ள முடியாதா?''

''இல்லை உஷா...''

''உங்க அம்மாகிட்டே சொல்லுங்களேன்-ப்ளீஸ்''

''அம்மாவைப் பொறுத்த வரைக்கும் இப்பவே என் கல்யாணம் லேட் உஷா... இதுக்கு மேலேயும் அவங்களை காத்திருக்கச் சொல்றது நியாயம் கிடையாது...''

''நான் வேணும்னா ஒரு நாள் உங்க அம்மாகிட்டே வந்து சொல்லட்டுமா?''

''நீ வந்து சொன்னா உனக்காக சரின்னு சொல்லிடுவாங்க. ஆனா-மனசுக்குள் சங்கடப்பட்டுக்கிட்டு இருப்பாங்க. மகனோட கல்யாணம் லேட் ஆகுதே என்கிற தவிப்பு உள்ளுக்குள் சுத்திக்கிட்டே இருக்கு. அந்தத் தவிப்பை அவங்களுக்கு நான் குடுக்க விரும்பலை உஷா... எங்க அப்பா நாலு வருஷத்துக்கு முந்தி செத்துப் போயிட்டது அம்மாவுக்கு ரொம்பப் பெரிய இன்செக்யூரிட்டி உஷா - அதை மறந்திடாதே..!''

''அம்மாவுக்கு இப்ப என்ன வயசாகுது?''

''வயசு ஒண்ணும் பெரிசா ஆயிடலை. ஐம்பத்தி ஆறு வயசுதான் ஆகுது. ஆனா - மனசால் எக்கச்சக்க வயசாயிடுச்சி. என்னா - அவங்க விடோ. விடோ ஆன பிறகு ரெண்டு

மகளுக்குக் கல்யாணம் வேற பண்ணி அனுப்பியிருக்காங்க... இந்த பேக்கிரவுண்ட்ல அவங்க மனதைப் பத்தி நெனைச்சிப்பார்-புரியும்-அவங்களோட அவசரம்...''

உஷா முழங்காலில் கைகளைக் கட்டியவாறு மௌனமாக அமர்ந்திருந்தாள். தாமரைச் செல்வன் அவளைப் பார்த்துக் கொண்டே தொடர்ந்தான்.

''ஆறு மாதம் கழிச்சிச் சொல்லப் போறதை இப்ப சொல்லப்போறே...அவ்வளவுதானே?''

''கல்யாணப் பேச்சே ஆரம்பிக்காமே இருக்கற இந்த நேரத்ல போய் பேச்சை ஆரம்பிக்கத்தான் ஒரு மாதிரி தயக்கமா இருக்கு...நாமே இன்னும் இவளோட கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கலை. அதுக்குள் இவளே கல்யாணத்துக்கு ஆசைப்படறாள் பார்னு அப்பா நெனைச்சிடு வாரோன்னு தான் வெட்கமாயிருக்கு...''

''அதுக்கு என்ன பண்ண முடியும்? நீ ஒண்ணும் சின்னப் பிள்ளை இல்லையே - கல்யாணதுக்கு ஆசைப்படாம இருக்கிற துக்கு...! இருபத்தி மூணு வயசுப் பொம்பளை உஷா நீ! நீ போய்க் கல்யாணம் செய்து வையுங்க அப்பான்னு கேக்கப் போறதில்லை. நீ கல்யாணம் பண்ணிக்கப் போறதை அவர்கிட்டே சொல்லப்போறே...!''

''பயங்கரமான விஷயம் இல்லையா இது-அப்பாவுக்கு?''



''பயங்கரமான விஷயம்தான்.''

''அதான் கஷ்டமாயிருக்கு...''

''உனக்குக் கஷ்டமா இருந்தா நான் உங்க அப்பாகிட்டே பேசட்டுமா?'' - தாமரைச் செல்வன் கேட்டான்.

''நிஜமாவா?'' உஷா ஆச்சர்யத்துடன் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''பந்தை எத்தனை நாளைக்குத்தான் நம்ம கோர்ட்லேயே வச்சிருக்கிறது...? நீயோ; இல்லை நானோ அவரோட கோர்ட்டுக்குப் பந்தை அடிச்சித் தள்ளிட வேண்டியதுதான்... சொல், என்னைக்கி; எங்கே வந்து உங்க அப்பாவை நான் பார்த்துப் பேசட்டும்...?''

''நீங்க ஒண்ணும் பேச வேண்டாம்....நானே பேசிக்கிறேன்.''

''உனக்குத்தான் கஷ்டமாயிருக்குன்னு சொல்றியே...''

உஷா யோசனை செய்தாள். இனம் பிரிக்கத் தெரியாத பலவித உணர்வுகள் அவளுக்குள் பொங்கிக் கொண்டிருந்தன. தாமரைச் செல்வனுடன் காதல் வயப்பட்டுப் பழகத் தொடங்கியிருந்தபோது துளிர்த்துக் கொண்ட நூதன உணர்வுகள் மீண்டும் அவளுள் மலர்ந்து குலுங்கின. எந்த யோசனைக்கும் வர இயலாமல் அவளின் மனம் சுழன்று கொண்டே இருந்தது. உஷா ஆற்றாமையுடன் தாமரைச் செல்வனைப் பார்த்தாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த தாமரைச் செல்வன் கொஞ்சம் பொறுமை

இழந்து கேட்டான்.

''ஒரு யோசனையும் வரமாட்டேங்குதா?''

''கோவம் வருது போலிருக்கு...''

''வராதா பின்னே...? ஏதாவது ஒரு வழியில் போயிடணும்...ஒண்ணு நீ பேசணும்; இல்லை நான் போய்ப் பேசணும். அதுவும் உடனே...''

''நீங்க உங்க அம்மாவுக்காக உடனே பேசச் சொல்றீங்க. நான் என் அப்பாவுக்காகக் கொஞ்ச நாள் கழிச்சிப் பேசலாமேன்னு சொன்னேன். இதுல கோபம் வர்றதுக்கு என்ன இருக்கு...?'' உஷா அமைதியாகக் கேட்டாள். தாமரைச் செல்வன் பேசாமல் இருந்தான். உஷாவும் சில நிமிடங்களுக்குப் பேசாமல் இருந்தாள். பின் சொன்னாள்:

''சரி; நீங்களே எங்க அப்பாவைப் பார்த்துப் பேசிருங்க...''

உடனே தாமரைச்செல்வனின் முகம் மலர்ந்தது. 'வெரிகுட். கை குடு...' என்றபடி உஷாவின் கையைப் பிடித்துக் குலுக்கினான்.

''எனக்கு ஒரே ஒரு நாள் டைம் குடுங்க. அப்பாவை நீங்க எங்கே எப்படி மீட் பண்ணிப் பேசறதுன்னு சொல்லிடறேன்... நீங்களே பேசிட்டா எல்லாம் ஒரே வழியில் முடிஞ்சிடும்...''

''உங்க அப்பாவோட ரீயாக்ஸன் எவ்வளவு கடுமையா இருந்தாலும் நீ பின்வாங்கிடக் கூடாது உஷா...''

''முதல்ல நீங்க மீட் பண்ணிப் பேசுங்க...''



''இன்னிக்கு நைட் யோசிச்சி நாளைக்குச் சொல்லிடுறியா?''

''ஓ....எஸ்...''

''உஷா - நீயும் நானும் வேற வேற ஜாதி. முதல்ல அந்த பிரச்னைதான் ரொம்ப சீரியஸா ஆரம்பிக்கும்; நீ பயப்படாமே அதையெல்லாம் ஃபேஸ் பண்ணணும்...''

''பார்ப்போம்... நம்ம கல்யாணம் எல்லாக் கஷ்டமும் பட்டுத்தான் நடக்கணும்னு எழுதியிருந்தா-அப்படியே நடக்கட்டும்.''

''எது வந்தாலும் உனக்கு நான் இருக்கேன். அதை மறந்திடாதே.''

''சரி எழுந்திருங்க. போலாம். வீட்ல போய் நான் சமைக்கணும்'' இருவரும் எழுந்து வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

---

## 3

---

**உ**ஷாவிற்கு இரவு தூக்கம் வரவில்லை. புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். காதல் உறவு முக்கியமான கட்டத்தை நோக்கி நகர்ந்து வந்திருக்கிற இனிய அதிர்ச்சி அவளின் ரத்த ஓட்டம் முழுவதும் வியாபித்திருந்தது. புயல் ஒன்று சரேலெனக் கரையைத் தாக்க விரைந்து வருவது போலிருந்தது. சற்றுத் தள்ளி ஆங்காங்கு தூங்கிக் கொண்டிருக்கிற தன் குடும்பத்தினரைப் படுத்திருந்தபடியே உஷா

கவனித்துப் பார்த்தாள். இந்த நிமிஷம் வரை இவர்களின் வாழ்க்கையில் இல்லாததாக இருக்கிற அவளின் காதலுறவு வேறொரு மெய்ப்பொருள் பொதிந்ததால் உஷாவிற்கு மின்னொளியாய் ஒளிர்ந்தது.

இந்த மின்னொளி, முதலில் காட்சியாகும்போது குடும்பத்தினரை மின்னலைத் தொடர்ந்து இடி முழக்கம் தாக்குவது தவிர்க்க முடியாததுதான். ஆனால், இடியும் மின்னலும் வானவெளியைப் பாதிப்பதில்லை. மனிதர்கள் வான வெளியாக நின்று விட்டால் எப்படி இருக்கும்? உஷா யோசித்துப் பார்த்தாள். தாமரைச் செல்வன் அவளுடைய நினைப்பில் வந்தான். அவனுடன் நட்பு ஏற்பட்டுக் காதல் பரிமளித்த மொத்த கால கட்டத்தையும் எண்ணிப் பார்த்தாள். பற்பல சம்பவத் தொடர்களில் தாமரைச் செல்வன் தெரிந்தான். தாமரைச் செல்வனின் அம்மாவையும் உஷா நினைத்துப் பார்த்தாள். ரொம்பவும் மென்மையான பெண்மணி அவள். மகனுக்கு அன்பு செலுத்துவதை மட்டும் வாழ்க்கையாக வைத்திருக்கும் இதமான பெண்மணி. மகன் வாழ்க்கைத் துணைவியாக எந்தப் பெண்ணை அழைத்து வந்தாலும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிற சாதுவான பெண்மணி. மாமியார் என்ற முறையில் எந்த நெருடலும் இல்லாமல் உஷாவின் மனம் தாமரைச் செல்வனின் அம்மாவை ஏற்றுக் கொண்டிருந்தது. நல்ல நண்பன் போன்ற கணவனாக தாமரைச் செல்வன் விளங்குவான். இன்னொரு அம்மா



போல மாமியார் இருப்பாள். இந்த அளவில் உஷா தயக்கமோ சந்தேகமோ இல்லாமல் இருந்தாள். ஆனால், அவள் பிறந்து வளர்ந்த குடும்பத்தைத் தாண்டிச் செல்ல அவளின் மனம் தயங்கியது. அந்தக் குடும்பத்திலும் அவளுக்கு எந்தப் பிரச்னைகளும் கிடையாது. அவளுடைய அப்பா கிருஷ்ணசாமி மனித உணர்வுகளை மதிக்கத் தெரியாத மன முரடர் இல்லை. வலிமையான ஆச்சாரம் எதையும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருக்கிற அறிவுக் குருடரும் இல்லை. ஆனாலும்...? உஷாவின் மனம் சந்தேகம்தான் பட்டது. ஜாதி வித்தியாசத்தைப் பாராட்டாமல் அப்பா அவளுடைய காதல் கல்யாணத்தை ஒப்புக் கொள்வாரா? உஷா பெருமூச்சு விட்டாள். அப்போது தூக்கம் கலைந்து எழுந்த அவளுடைய அப்பா பாத்ரூம் போய்விட்டு வந்து படுத்துக்கொண்டார். உஷாவிற்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது. வருகிற ஞாயிற்றுக்கிழமை அவளுடைய அப்பா மட்டும் மாங்காடு வராமல் வீட்டிலேயே இருக்கப் போகிறார். வீட்டில் அன்று அவர் தனியாகத்தான் இருப்பார். நல்ல சந்தர்ப்பம் அது. அந்த நேரத்தில் தாமரைச் செல்வன் வந்து அவரைப் பார்த்துப் பேசினால் என்ன? வேறு யாரின் குறுக்கீடுகளும் இருக்காது. அவசரப்படாமல் நிதானமாக விளக்கி கல்யாணத்திற்கு சம்மதம் பெறுகிற முயற்சியை ஆரம்பித்து வைக்கலாம்.

உடனே உஷாவின் மனம் பரபரப்படைந்து விட்டது. அவளுடைய காதலுக்கு சம்மதம்

கிடைத்தாற் போலவே குதூகலமாக இருந்தது. வருகிற ஞாயிற்றுக்கிழமையே தாமரைச் செல்வனை வந்து அப்பாவைச் சந்திக்கச் சொல்லி விட வேண்டியதுதான். தாமரைச் செல்வன் சொன்னது போல பந்தை அப்பாவின் கோர்ட்டில் உடனே தள்ளிவிட வேண்டியதுதான். அப்பாவிற்கு நிகராக தாமரைச் செல்வனும் பேசுவான். புத்திக் கூர்மையில் அப்பாவிற்கு அவன் எந்த விதத்திலும் குறைந்தவன் இல்லை. உஷாவின் மனதில் அவளுக்கும் தாமரைச் செல்வனுக்கும் கெட்டிமேளம் ஒலிக்கக் கல்யாணம் நடந்தது. அந்தக் கற்பனை யிலேயே லயித்திருந்தபோது தூக்கமும் வந்தது. தூக்கத்தில் வந்த கனவிலும் உஷாவிற்கு தாமரைச் செல்வனுடன் ஆடம்பரமாகத் திருமணம் நடந்தது.

---

# 4

---

**வ**ங்கியில் சாப்பாட்டு நேரத்தில் உஷாவும் தாமரைச் செல்வனும் சூழ்நிலை யைக் கவனித்துக் கொண்டு அவசரமாகச் சந்தித்தார்கள்.

''நீ காலையில் எத்தனை மணிக்கு மாங்காடு கிளம்பிப் போவே?'' தாமரைச் செல்வன் கேட்டான்.

''எட்டு மணிக்குக் கிளம்புவோம்.''



''திரும்பறது?''

''சாப்பாடு எடுத்திட்டுப் போறோம். அதனால் மெதுவா ரெண்டு மணிக்கு மேலேதான் அங்கேயிருந்து கிளம்புவோம்.''

''வீடு வந்து சேர எப்படியும் மூணு மணிக்கு மேல் ஆகுமா?''

''ஆமா.''

''அப்ப நான் உங்க அப்பாவைப் பாக்க றதுக்கு எத்தனை மணிக்குப் போகட்டும்?''

''பத்து மணிக்குப் போங்க.''

''அந்த நேரத்ல வேற யாரும் உங்க அப்பாவைப் பாக்கறதுக்கு வந்திடமாட்டாங்களே...?''

''பொதுவா ஞாயிற்றுக்கிழமை அப்பாவைப் பாக்க வர்ரவங்க ஈவினிங் தான் வருவாங்க...''

''சாமியை நல்லா கும்பிட்டுட்டுப் போறேன்!''

''நிதானமா, நல்லபடியா பேசுங்க தாமரை....''

''பேசறத்துக்கு மட்டும் எனக்கு யாரும் கத்துத் தர வேண்டியதில்லை உஷா...''

''அப்பாவும் சளைக்க மாட்டார். அதை ஞாபகம் வச்சிக்கோங்க...''

''ஆனா ஒண்ணு உஷா; அவர் சம்மதிச்சாலும் சம்மதிக்காவிட்டாலும் நம் கல்யாணம் மட்டும் கூடிய சீக்கிரம் நடந்தாகணும்...அதை மறந்திடாதே...''

''பத்து மணிக்கு மாங்காட்டில் இருந்து நான்

நெனைச்சிக்கிறேன்...''

''மாங்காட்டு அம்மனுக்கு ஏதாவது வேண்டுதல் வேண்டிட்டு வா...அடுத்த வருடம் நிறைவேத்திடலாம்....''

''மற்ற விஷயங்களைத் திங்கட்கிழமை இங்கே பேசுவோம்.''

''ஓ.கே.''

---

# 5

---

ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி: ஆலந்தூரில் உள்ள வீட்டில் உஷாவின் அப்பா ஹாலில் பேப்பர் படித்தபடி உட்கார்ந்திருந்தார். வீடு அமைதியாக இருந்தது. வாசலில் யாரோ வருகிற சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தார். அதுவரை அவர் பாத்திராத கறுப்பு நிற இளைஞன் செருப்புகளை விட்டுவிட்டு அவரைப் பணிவுடன் வணங்கினான்.

''என் பெயர் தாமரைச் செல்வன்.''

''ஐ'ம் கிருஷ்ணசாமி. ப்ளீஸ் கம்...'' என்றார் உஷாவின் அப்பா.

தாமரைச் செல்வன் அவருக்கு எதிரில் வந்து நின்றான்.

''உட்கார் தம்பி...''

தாமரைச் செல்வன் கிருஷ்ணசாமிக்கு எதிரில் கிடந்த பழைய நாற்காலியில்



கவனமாக உட்கார்ந்தான். ''நான் உங்க டாட்டர் உஷா வொர்க் பண்ற பேங்க்ல இருக்கேன்...'' தாமரைச் செல்வன் இரவு பூராவும் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த முறையில் பேச்சைத் தொடங்கினான்.

''அப்படியா? குட்... உஷா மாங்காடு போயிருக்காளே தம்பி; அவ திரும்பி வர சாயங்காலம் ஆகும்...''

''தெரியும் சார்; நேத்திக்கே உஷா சொன்னாங்க...நான் உங்களைப் பாக்கலாம்னு வந்தேன்''

''சும்மா பாத்துட்டுப் போகலாம்னுதான் வந்தியா...?''

''இல்லை சார்...'' தாமரைச் செல்வன் தயங்கினான்.

''தென்?''

''உங்ககிட்டே முக்கியமான விஷயம் பேசணும்...''

''என்கிட்டேயா? வொண்டர்...என்கிட்டே உனக்கு என்ன பேசணும்?''

''உஷா உங்ககிட்டே எதுவும் சொல்லலையா?'' ஒத்திகையில் இருந்து இழையும் பிசகாமல் தாமரைச் செல்வன் கேட்டான்.

''உன் பெயர் என்ன சொன்னே?''

''தாமரைச் செல்வன்.''

''உன் பெயரைக்கூட உஷா என்கிட்டே சொன்னதில்லைன்னுதான் எனக்கு ஞாபகம்...!''

தாமரைச் செல்வன் ஒரு கணம் உஷாவின் அப்பாவைக் கூர்ந்து பார்த்தான். அவரின் முகபாவனையில் இருந்து அந்த நிமிட அவருடைய மன இயல்பை அவனால் கண்டு கொள்ள முடியவில்லை. அவருக்கும் அவனுக்கும் இடையே இருக்கிற இடை வெளியின் தூரம் தெரிந்தது அவனுக்கு... தூரத்தை அகற்றுகிற முனைப்பில் நிமிர்ந்து நாற்காலியின் விளிம்பில் உட்கார்ந்து பேச்சைத் தொடர்ந்தான்.

''உஷா என்னைப் பத்திக் கொஞ்சமாவது சொல்லியிருக்கலாம்னு நெனைச்சேன்...''

''அப்படியா? ஆனால் பொதுவா உஷா எதைப்பத்தியும் அல்லது யாரைப் பத்தியும் என்கிட்டே பேசாம இருக்கிறதில்லை...''

''நான் வேற மாதிரி நெனைக்கிறேன்...''

''சொல்லேன் எப்படின்னு...''

''பொதுவான விஷயங்களோட சேர்த்துப் பேசற விஷயமில்லை என் விஷயம்...!'' தாமரைச் செல்வன் உறுதியான தொனியில் சொன்னான்.

''நீ இப்படி நினைக்கிறே...ஆனா உஷா வேற மாதிரி நெனைச்சிருக்கலாம்'' கிருஷ்ணசாமியும் அதே தீர்க்கமான தொனியில் சொன்னார்.

''வேற மாதிரின்னா?''

''என்கிட்டே வந்து சொல்லிக்கிற அளவுக்கு உன்னைப் பத்தின எந்த விஷயத்துக்கும் உஷா முக்கியத்துவம்



கொடுக்கலையோ என்னவோ...?'' கேட்டு விட்டு கிருஷ்ணசாமி சன்னமான செருக்குடன் தாமரைச் செல்வனைப் பார்த்தார். அவ்ன் மட்டும் அவருக்கு குறைந்தவனா என்ன?

''வேறு மாதிரிகூட இருக்கலாமே சார்...'' என்றான்.

''எப்படி?''

''என்னைப் பத்தின விஷயத்தை இப் போதைக்கு உங்ககிட்டே சொல்ல முடியாத ரகசியமாகக் கூட உஷா மனசில் வைத்திருக்கலாமே...?''

''என் மகளுடைய மனசில் எனக்குத் தெரியாத ரகசியம் எதுவும் இருக்காதுன்னு - இந்த நிமிஷம் வரைக்கும் எனக்கு ஒரு நம்பிக்கை தம்பி....!''

''மன்னிக்கணும் சார்; உங்க நம்பிக்கை உஷா விஷயத்திலே தப்பாப் போயிருச்சி...''

''புரியற மாதிரி பேசறியா தாமரைச் செல்வன்?''

''நானும் உஷாவும் நெருங்கிய நண்பர்கள்.''

''நட்பு மறைக்கப்பட வேண்டிய ரகசியம் கிடையாது.''

''வெறும் நட்பாவே இருந்திருந்தா உஷா மறைக்காமே உங்ககிட்டே சொல்லி யிருப்பா...'' தாமரைச் செல்வன் தயக்கத் துடன் நிறுத்தினான்.

கிருஷ்ணசாமியும் தயக்கத்துடன்

அவனைப் பார்த்தவாறு காத்திருந்தார். வீட்டின் சூழலே வேறொரு விதமான இறுக்கம் பெற்றிருந்தது.

''அப்போ நீ, உஷா என்கிட்டே உன்னைப் பத்திச் சொல்லியிராத எதையோ சொல்ல வந்திருக்கே... அப்படித் தானே?'' - கிருஷ்ணசாமி கேட்டார்.

''நான் சொல்ல வந்ததில் தப்பு ஒண்ணும் இல்லையே?''

''நீ எதைச் சொல்ல வந்திருந்தாலும் உஷாவும் இருக்கும்போது வந்திருக்கலாம்...''

''இல்லை சார்; இன்னைக்கு நான் வந்தது எதிர்பாராத விஷயம்... நிஜமா நான் உஷாவைத்தான் பேசச் சொன்னேன். என்னமோ உஷாவிற்கு தைரியம் வரலை. என்னை வந்து உங்ககிட்டே பேசுங்கன்னு சொல்லிட்டா. அதுவும் இன்னிக்கி உங்க வீட்ல உங்களைத் தவிர எல்லாரும் மாங்காடு போறதால - நீங்க மட்டும் தனியா இருக்கும் போதே நான் வந்து பேசிடறது பெட்டர்னும் உஷாவுக்குத் தோணினதாலேதான் இன்னிக்கி வந்தேன் நான்...''

கிருஷ்ணசாமி மௌனமாக இருந்ததால் தாமரைச் செல்வனும் மௌனமாக அமர்ந்திருக்க வேண்டியிருந்தது... ஆகையால் வீட்டு ஹாலை நோட்டம் விட்டான். நடுத்தர குடும்பத்தின் எல்லா அம்சங்களோடும் அந்தச் சின்ன ஹால் காட்சி அளித்தது. தாமரைச் செல்வன் கைக்குட்டையை எடுத்து லேசாக முகத்தை ஒற்றிக் கொண்டான்.



''நீ என்ன ஜாதின்னு நான் தெரிஞ்சிக்கலாமா தம்பி?''

கிருஷ்ணசாமி சிறு தயக்கத்துடன் கேட்டார்.

''அவசியமா சொல்லணுமா?''

''அதைத் தெரிஞ்சுக்க வேண்டியது எனக்கு ரொம்ப அவசியம்.''

''நான் உங்க ஜாதியில்லை சார்.''

''அப்ப நீ பேச வந்திருக்கற விஷயத்தை எங்கிட்டே பேச வேண்டிய அவசியமே இல்லை தாமரைச் செல்வன்...''

''ஸாரி சார். அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்திட வேண்டாம் நீங்க...''

''ஆறு நாள் உட்கார்ந்து பேசினாலும் என்னுடைய இந்த முடிவில் எந்த மாற்றமும் ஏற்படாது.''

''நான் வேறு ஜாதிக்காரன் என்கிறதுதான் காரணமா?''

''அதுதான் முதல் காரணம்...''

''அது காரணமா இருக்க வேண்டாம் என்கிறதுதான் என்னோட அபிப்பிராயம்...''

''உன் அபிப்பிராயத்தைப் பத்தி எனக்குக் கவலை கிடையாது.''

''எனக்கு சொந்த வீடு இருக்கு சார், கிட்டத்தட்ட நாலாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கறேன். எனக்கு ரெண்டு தங்கச்சிகள். ரெண்டு பேருக்குமே கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டேன். அப்பா இறந்து போயாச்சி.

அம்மா மட்டும்தான். வேறு எந்தவிதமான பிக்கலோ கடனோ கிடையாது. 'ரொம்ப நிம்மதியான வாழ்க்கையை உஷாவும் என்னோடு பகிர்ந்து என்கூட வாழணும்'னு நான் பிரியப்படறேன். உஷாவும் பிரியப் படறா. எங்களோட இந்தப் பிரியம் குருட்டுத்தனமான வெறும் காதலால் வந்ததில்லை. நாங்க ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சிக்கிட்டு இருக்கோம். ஒருத்தரை ஒருத்தர் மதிக்கிறோம். அதனால் வாழ்க்கையில் ஒருத்தருக்கு ஒருத்தர் நல்ல துணையா நிக்கணும்னு ஆசைப்படறோம். நீங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செய்து வைக்கணும்...''

பேசி முடித்தான் தாமரைச் செல்வன். கிருஷ்ணசாமி எழுந்து உள்ளே போனார். சில நிமிடங்கள் கழித்துத் திரும்பி வந்தார். அடுத்த வீட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒலி உரக்கக் கேட்டுக் கொண்டிருந்தது.

''நீ சொல்ல வந்த விஷயம் இது தானா?'' கிருஷ்ணசாமி கேட்டார்.

''யெஸ்.''

''மன்னிக்கணும் தாமரைச் செல்வன்; என்னைப் பொறுத்தவரைக்கும் இது நடக்க முடியாத விஷயம்...''

''என்னைக்கேட்டா நடக்க முடியாததுன்னு மனுஷ வாழ்க்கையில ஒண்ணுமே கிடையாது சார்...''

''அப்ப அது நான் நடக்க விரும்பாத விஷயம்னு வச்சிக்க...''



தாமரைச் செல்வன் மௌனமாக கிருஷ்ணசாமியைப் பார்த்தான். அவரும் அவனைக் கர்வத்துடன் கவனித்தார். அவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு சுவர் முளைத்து ஓங்கி வளர்ந்து கொண்டிருந்தது.

சில நிமிடங்களுக்குப் பிறகு கிருஷ்ணசாமி கேட்டார். ''இந்த விஷயம் உன் அம்மாவுக்குத் தெரியுமா?''

''தெரியும் சார்; எங்க அம்மாவுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அவர்களுக்கு உஷாவை ரொம்பப் பிடிக்கும்.''

''அதனால பேச வந்திட்டே... உன் அம்மாவுக்குப் பிடிக்காமே போயிருந்தா - ஆட்சபேணை இருந்திருந்தா இப்படி பேச வந்திருப்பியா?''

''நாம் நடந்திருப்பதை வைத்துத்தான் பேசணும். அது தான் சரியா வரும். 'என் அம்மாவுக்குப் பிடிக்காமே போயிருந்தா...' என்கிற கற்பனையான கேள்விக்குக் கற்பனையான ஒரு பதிலைச் சொல்லிவிட்டு இருக்கறது என்னைப் பொறுத்தவரைக்கும் வேஸ்ட் ஆஃப் டைம் சார்... ரியாலிட்டியை ஃபேஸ் பண்ணி மட்டும் நாம் பேசுவோம். அதான் நல்லது...''

''அப்ப நீ என் குடும்பத்தோட; என்னோட, ரியாலிட்டியை ஃபேஸ் பண்ணணும் தாமரைச் செல்வன்!''

''ஃபேஸ் பண்றேன் சார்; எதுவா இருந்தாலும் ஃபேஸ் பண்றேன்.''

"உஷாவை உனக்குக் கல்யாணம் செய்து தர எனக்கு விருப்பமில்லை தாமரை செல்வன்!"

"என்ன காரணம்னு நான் தெரிஞ்சிக்க லாமா?"

"இதான் காரணம்னு குறிப்பிட்டு சொல்லிடற சமாச்சாரம் இல்லை இது. இதி நிறைய விஷயங்கள் இருக்கு..."

"நான் உங்க ஜாதிக்காரன் இல்லே என்கிறது பெரிய பிரச்னையா இருக்கா?"

"அதுவும் ஒரு பிரச்னைதான். ஆனா, அ ஒண்ணுதான் பிரச்னை என்ற மாதிரி கிடையாது. உஷா என் மகள். நான் வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கின பெண் இதுவரைக்கும் அவளோட வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் என்னோட பங்கு இருக்கு. அவளுடைய கல்வி; வேலை - எல்லாவற்றிலும் நான் அவளுக்கு வழி காட்டியா இருந்திருக்கேன். அவளோட கல்வியையும் வேலையையும் விடப் பெரிய விஷயம் - அவளோட கல்யாணம்...அந்த விஷயத்தில் அவளே அவளுக்கு வழிகாட் டியா நடந்துக்கநெனைச்சா தாங்க முடியுமா என்னால்? அவளோட கல்யாணமும் என் தீர்மானப்படி நடக்கிறதுதான் எனக்குச் சந்தோஷத்தைத் தரும். இல்லையா? ஒரு விஷயத்தை நீ ஞாபகம் வச்சிக்க தாமரைச் செல்வன். நம்ம கலாச்சாரத்ல பெண் பிறந்த அன்னிக்கே அவளுடைய பெற்றோர்கள் அவளோட கல்யாணம்பத்தி மனசால் தயார்



ஆயிட ஆரம்பிச்சிடறாங்க...மகளின் கல்யாணம் ஒரு மானசீக மண்டபமா பெற்றோர்களின் மனசில் கொஞ்சம் கொஞ்சமா உருவாகுது. அவரவர் ஜாதி வழக்கப்படி; அவரவர் குடும்ப அந்தஸ்துக்குத் தக்கபடி; ஆசைக்குத் தக்கபடி ஒவ்வொரு செங்கல்லா வைத்து வைத்து - அந்த மானசீக மண்டபம் ஒரு நீண்ட காலப் போக்கில் மனசில் வளர்ந்திடுதுப்பா தம்பி - இன்னைக்கி திடீர்னு நீ வந்து அந்தக் கால மண்டபத்தை இடிச்சித் தள்ளிடுங்கன்னு சொன்னா - அது எவ்வளவு பெரிய வலியைக் கொடுக்கும் தெரியுமா? பூர்வீக வீட்டை வித்துருங்கன்னு ஒருத்தனைப் பார்த்துச் சொல்ற மாதிரியான சமாச்சாரம் இது..."

"இந்த இடத்தல நான் ஒண்ணு சொல்லலாமா?" தாமரைச் செல்வன் குறுக்கிட்டுக் கேட்டான்.

"சொல்."

"உங்களோட மானசீக மண்டபத்தை இடிக்கச் சொல்லலை சார் நான். கால மாற்றத்துக்குத் தக்கபடி கொஞ்சம் ரீ மாடல் பண்ணிக்கோங்கன்னுதான் கெஞ்சிக் கேட்டுக்கறேன்."

"இல்லை தாமரைச் செல்வன்; என்னுடைய வீடு முழுக்க முழுக்க என்னோட ப்ளான்ல தான் கட்டப்படணும்; கட்டவும் பட்டிருக்கு! இந்த ப்ளான்ல எங்களுக்கு எந்தக் கஷ்டமும் கிடையாது. அதனால ரீ மாடல் பண்ணணும் என்கிற அவசியமும் இல்லை...!"

''ஸோ - இதான் உங்களோட முடிவா
தீர்மானம்...?''

''யெஸ்...''

''உங்களோட இந்தத் தீர்மானத்தை உ
ஏற்றுக் கொள்ளாவிட்டால் என
பண்ணுவீங்க?''

''ஏற்றுக் கொள்ளாட்டா என்ன பண்
முடியும்? அப்படியொரு கஷ்டத்தை என் ம
எனக்குக் கொடுத்தாள்னா அதை நா
அனுபவித்துத்தான் தீரணும்... ஒரு விஷ
சொல்றேன் தாமரைச் செல்வன்; முன்
என் வீட்டுத் தோட்டதல எத்தனை
பூத்திருக்கு... அதில் ஒரே ஒரு பூ
தெருவில் இருக்கும் யாரோ ஒரு பைய
பறிச்சிட்டுப் போயிட்டாலே என
மனசுக்குக் கஷ்டமா இருக்கும்... நா
பார்த்துப் பார்த்து வளர்த்த செடியில் இரு
பூவைப் பறிச்சிட்டுப் போயிட்டானே
கோபம் கோபமா வரும்...அப்படிப்ப
எனக்கு என் மகளை யாரோ எனக்கு முன்பி
தெரியாத ஒரு பையன் வந்து கல்யாண
பண்ணிக்கப் போறேன்னு சொன்னா எப்ப
இருக்கும்? நீயே யோசிச்சிப் பார்த்
சொல்லு... ஒரு மகளோட கணவனை ஒ
தகப்பன் தேர்ந்தெடுக்க முடியாமல் போற
அந்தத் தகப்பனுக்கு முதலில் பெ
அவமானம் என்கிறது அவளோ
தகப்பனுடைய ஈகோவுக்கும் ஒரு அடி! எ
ஈகோவை அடிக்கிற சமாச்சாரத்துக்கு நா
எப்படி 'யெஸ்' சொல்வேன்...?''



தாமரைச் செல்வன் பதில் சொல்லாமல் வெறுமே கிருஷ்ணசாமியையே பார்த்துக் கொண்டிருந்தான்... அவரும் மௌனமாகப் பல நிமிஷங்களுக்கு அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். பின் அவனிடம் சொன்னார்.

''நான் பாட்டுக்கு அமைதியா பேப்பர் படிச்சிட்டு இருந்தேன். நீ வந்து அந்த அமைதியைக் கெடுத்திட்டே...அதுக்கே என்னால உன்னை மன்னிக்க முடியாது போலிருக்கு தாமரைச் செல்வன்...என் குடும்ப நிம்மதியைப் பற்றி ஒரு பயத்தை வேற என் மனசில் உண்டு பண்ணிட்டே...''

''என் நிம்மதியும் கூடத்தான் இப்பப் போயிடுச்சி!'' தாமரைச் செல்வன் சொன்னான் - எழுந்து கொண்டே.

''அதுக்கு நான் பொறுப்புக் கிடையாது.''

''மறுபடியும் ஒரு நாள் வந்து உங்களைப் பார்க்கட்டுமா?'' தாமரைச் செல்வன் நம்பிக்கை இல்லாமல் கேட்டான்.

''எதுக்கு-என் நிம்மதியைக் கெடுக்கவா?'' கிருஷ்ணசாமியும் எழுந்தபடியே கேட்டார்.

''மன்னிக்கணும். யாருடைய நிம்மதியைக் கெடுக்கறதும் என் நோக்கம் இல்லை...நான் வரேன்...''

தாமரைச் செல்வன் வேகமாக வெளியேறித் தெருவில் இறங்கி நடந்தான்.

# 6

**தா**மரைச் செல்வன் அவனுடைய அம்மா அமிர்தவல்லியின் எதிரில் கவலையுடன் உட்கார்ந்திருந்தான்.

"இது நீ எதிர்பார்த்தது தானேப்பா தாமரை? எதுக்காக இப்பவே கவலைப்படறே...?"

"அந்த ஆள் பேசினதுக்காக கவலைப் படலைம்மா...அவரை நான் பொருட் படுத்தவே இல்லை. என் கவலையெல்லாம் உஷாவைப் பத்தித்தான். அவளுக்கு அவளோட குடும்பத்தார் மேல அட்டாச் மெண்ட் ரொம்ப அதிகம். அந்த அட்டாச் மெண்ட்ல அவள் அப்பா சொல்றதைக் கேட்டு என்னைக் கல்யாணம் செய்துக்க யோசிப்பாளோன்னு பயமா இருக்கு எனக்கு..."

"முதல்லேயே அதைப் பத்தியெல்லாம் நல்லா யோசிச்சிருக்கணும்-நீ...பார்; உன் அத்தை நூறு தடவை கேட்டுட்டா உன் கல்யாணத்தைப் பத்தி..."

"பொண்ணு பாத்துட்டு இருக்கோம்னு சொல்லிடுங்கம்மா..."

"அவளே ஏழெட்டு பொண்ணு சொன்னா..."

"ஒரு கண்துடைப்புக்கு அவங்க சொல்ற ரெண்டு மூணு பொண்ணுங்களைப் போய் பாத்திட்டு வந்திருவோமா?"

"நீ நாளைக்கே உஷா கூட பேசு..."



"பேசறேன்மா...அவள் எனக்கு மனைவியா வந்தா நல்லாயிருக்கும்..."

"அப்பா அம்மாவோட சம்மதத்தோட வந்தா இன்னும் நல்லாயிருக்கும்..."

"ஒரு வேளை அவளோட அப்பா அம்மா சம்மதம் இல்லாமலே எங்க கல்யாணம் நடந்தா - கல்யாணத்தை சிம்பிளா திருப்பதியில் வச்சிக்கலாம்மா."

"முப்பாத்தம்மா உன்னைக் கைவிட மாட்டா...உஷாவோட அப்பாவே கடைசியில் சம்மதிச்சு உங்க கல்யாணத்தை நடத்தி வைப்பார் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு..."

"எனக்கு கொஞ்சம் மனசு சரியில்லை யம்மா.. கபாலீஸ்வரர் கோயில் வரை போயிட்டு வந்திடறேன்..."

"சீக்கிரமா வந்திடு. அப்படியே வேறு எங்கேயும் போயிடாத..."

"வேற எங்கேயும் போகலைம்மா. கோயிலுக்கு மட்டும் தான் போறேன். போயிட்டு ஒரு மணி நேரத்ல வந்திடறேன்."

தாமரைச் செல்வன் மனத் தளர்வுடன் கோயிலுக்குக் கிளம்பிச் சென்றான்.

# 7

**மா**ங்காடு கோயிலில் இருந்து திரும்பிய உஷாவுக்கு வீட்டைநெருங்க நெருங்க மனசு படபடவென்று அடித்துக் கொள்ள

ஆரம்பித்தது. வீட்டுக்குள் நுழைந்தபோது அப்பாவின் முகத்தையே பார்க்க முடியவில்லை. விடுவிடுவென்று அவசரமாக டாய்லெட்டுக்குள் போய் ஐந்து நிமிடப் பொழுதை அங்கேயே போக்கியபடி நின்றவாறு ஹாலில் அப்பாவின் பேச்சுகளைக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். எத்தனை நிமிஷம்தான் டாய்லெட்டுக்குள் நின்று கொண்டிருப்பது...?

வெளியில் வந்து அக்கறையாக முகம் கழுவித் துடைத்தாள். காற்றாடியைச் சுழலவிட்டு அயர்வுக்கு உட்கார்ந்தாள்.

''கோயில்ல கும்பல் ரொம்ப இருந்ததா உஷா?'' கிருஷ்ணசாமி எந்த வித்தியாசமும் இல்லாத குரலில் விசாரித்தார்.

''கும்பல் ரொம்ப இல்லைப்பா...'' உஷா அவருடைய முகத்தைப் பார்க்காமலேயே சொன்னாள்.

''ஜனங்களுக்கு இப்ப வாழ்க்கையில் ரொம்பப் பிரச்சினைகள் இல்லை போலிருக்கு...!'' கிருஷ்ணசாமி சிரித்துக் கொண்டே சொன்னார்.

''பொதுவா முன்னே மாதிரி மாங்காட்டில் இப்பல்லாம் அவ்வளவா கும்பல் கிடையாதுங்க...'' என்று சொல்லியபடியே கிருஷ்ணசாமியின் மனைவி அகிலா முகம் கழுவித் துடைத்தபடி வந்தாள்.

''உஷா! அப்பாவுக்குப் பிரசாதம் எடுத்துக் கொடு'' என்றாள்.



''அப்புறமா எடுத்துக்கறேன். எனக்கு முதல்ல காப்பி கலந்து கொடு... அதைச் சாப்பிட்டுட்டுத் தாம்பரம் வரை போயிட்டு வந்திடறேன்...''

''உக்காருங்க. புடவை மாத்திட்டு அஞ்சு நிமிஷத்தல காப்பி கலந்து தரேன்.'' உஷா, தொலைக்காட்சியை இயங்க வைத்தாள். விளையாட்டு உலகக் காட்சிகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன. அக்கறையாகப் பார்ப்பது போல விளையாட்டுகளைக் கவனித்தாள் - இடையிடையே அப்பாவைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே...

கிருஷ்ணசாமி எப்போதும் போலத்தான் சகஜமாக இருந்தார். தாமரைச் செல்வன் வந்து அவருடன் பேசிவிட்டு போன சுவடே அவரிடம் இல்லை. ஒருவேளை தாமரைச் செல்வன் வந்து பேசவே இல்லையோ? உஷாவுக்குச் சந்தேகமாக இருந்தது. வராமல் இருந்திருந்தால் பரவாயில்லை என்றுகூடத் தோன்றியது. வீட்டில் ஏற்பட இருக்கும் குழப்பத்தைத் தள்ளிப் போட்டால் தேவலை என்றும் உஷாவிற்குத் தோன்றியது.

கிருஷ்ணசாமி, காப்பி சாப்பிட்டுவிட்டுத் தாம்பரம் கிளம்பியபோது அவளுக்கு 'அப்பாடா...'வென்று இருந்தது. வீட்டு வேலைகளை மளமளவென்று பார்த்தாள்.

செடிகளுக்கெல்லாம் தண்ணீர் ஊற்றினாள். தொலைக்காட்சியில் தமிழ்ப் படம் ஆரம்பித்ததும் உட்கார்ந்து பார்த்தாள்.

இரவு எட்டு மணிக்குத் தாம்பரத்தில் இருந்து திரும்பி வந்தும் கூட கிருஷ்ணசாமி அவளுடன் தாமரைச் செல்வன் பற்றி எதுவும் பேசவில்லை. சகஜமாகச் சாப்பிட்டு விட்டு எப்போதும் போல் ஒன்பதரை மணிச் செய்தியைத் தொலைக்காட்சியில் பார்த்துவிட்டுப் படுத்துக் கொண்டுவிட்டார். உஷாவும் உடனே படுத்துக் கொண்டாலும் கூட அவளுக்கு தூக்கம் வரவில்லை. அவள் தூங்கியதும் அப்பா மெதுவாக எழுந்து அம்மாவிடம் ஏதாவது பேசினாலும் பேசுவாரோவென்று உஷா தூங்காமலேயே தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தாள். அதே மாதிரியே கிருஷ்ண சாமியும் அயர்ந்து தூங்குவதுபோன்ற பாவனை காட்டியபடி படுக்கையில் தூக்கம் வராமல் வெறுமனே கண்களை மூடிப் படுத்திருந்தார். காலை தாமரைச்செல்வன் வந்து பேசிவிட்டுப் போன காட்சிகள் அவருக்குள் சுழன்று கொண்டிருந்தன.

## 8

"ஒரு வார்த்தை கூடவா உங்க அப்பா நான் வந்து போனதைப் பத்தி உன்கிட்டே பேசலை?" தாமரைச் செல்வன் ஆச்சர்யத்துடன் கேட்டான்.

"ஒரு வார்த்தை கூடப் பேசலை..."

"ஆச்சர்யந்தான் உஷா. பயங்கரமான



அழுத்தக்கார மனுஷன்...சரி; இப்ப என்ன பண்ணலாம்...?"

"யோசிப்போம்...நீங்க சொன்ன மாதிரி பந்தை அப்பா கோர்ட்ல தள்ளி விட்டாச்சி... கொஞ்ச நாள் பொறுத்திருந்து பார்ப்போம் - எப்படி அவர் ப்ளே பண்றார்னு..."

"ப்ளே பண்ணவே மாட்டார் போலிருக்கே!"

"இதுதான் அப்பாவோட ஸ்டைல்! கொஞ்சங்கூட தாங்கவே முடியாத விஷயம் ஒண்ணு அவருக்கு நடந்திருச்சின்னா - அதைப் பத்தி பேசக் கூடப் பிடிக்காமே ஊமை மனுஷனா ஆயிடுவார்."

"அப்படின்னா - இப்ப அவர் ஊமையா இருக்கறது நம்ம விஷயம் அவருக்குத் தாங்கவே முடியாததா ஆயிடுச்சின்னு அர்த்தமா?"

"யெஸ்."

"நீ இல்லாத நேரத்ல உங்க அம்மாகிட்டே கூட நான் வந்திட்டுப் போனதைப் பத்திப் பேசுவாரா மாட்டாரா?"

"பேசமாட்டார். ஏன்னா-அம்மாவால அப்பா மாதிரி வாயை மூடிட்டு இருக்க முடியாது. உடனே கத்திப் பெரிய ரகளை பண்ணிடு வாங்க. அப்பாவுக்கு அந்த மாதிரி ரகளையெல்லாம் சரிப்படாது. எதிலும் மௌனப் புரட்சிதான் பண்றதுக்கு ட்ரை பண்ணுவார்.

"அவர் மௌனப் புரட்சி பண்றார் என்கிறதுக்காக நாமும் அதே மாதிரி மௌனப்

புரட்சி பண்ணனும்னு அவசியம் கிடையாது உஷா! அவர் ஒண்ணும் சரிப்பட்டுவர்ர மாதிரி தெரியலைன்னா அதிரடி நடவடிக்கைதான்."

"உங்க அம்மா என்ன சொன்னாங்க?"

"அவங்களால வாயைத் திறந்து எதுவும் சொல்ல முடியலை..."

"உங்க அத்தை இருக்காங்களா, ஊருக்குப் போயிட்டாங்களா?"

"சித்தப்பா வீட்டுக்குப் போயிருக்காங்க; இன்னிக்கு நைட் எங்க வீட்டுக்குத் திரும்பிடுவாங்கன்னு நெனைக்கிறேன். ஆனா, அவங்க ஊருக்குக் கிளம்பிப் போக இன்னும் மூணு நாள் ஆகும்..."

"அவங்க போனதும் நான் வந்து உங்க அம்மாகிட்டே பேசறேன்."

"நீ பேசி என்ன செய்ய? எனக்கே வெயிட் பண்ணிட்டு இருக்கறது நரகத்ல இருக்கிற மாதிரி இருக்கு, காதல் பண்றதில் இதுதான் எரிச்சலான விஷயம்..."

"என்ன பண்றது? வௌவாலுக்கு வாழ்க்கைப் பட்டா தலைகீழாகத் தொங்கத்தானே செய்யணும்!"

"தொங்கறதுக்கு தயார் உஷா. ஆனா, எத்தனை நாளைக்குத் தொங்கறதுன்னு தெரியாமலேயே தொங்கறதைத்தான் தாங்க முடியலை... நீ எங்க அம்மா கிட்டே வந்து பேசறதுக்குப் பதிலா உடனே உங்க அப்பா கிட்டே பேசறது பெட்டர்..."

"அப்பாகிட்டே இனிமே பேசறதுக்கு



ஒண்ணும் கிடையாதுங்க தாமரை.... அவர்தான் சொல்லிட்டாரே..."

"அதான் ஃபைனலா?"

"யெஸ்."

"அப்ப இனிமேலும் நாம் காத்திருக்க வேண்டாம்..."

"காத்திருக்க வேண்டாம்தான். ஆனாலும் காத்திருப்போம்..."

"எனக்குக் காத்திருக்கப் பிடிக்கலை. அவ்வளவுதான் சொல்வேன்."

"காத்திருப்பதால எந்தப் பிரச்சனையும் புதுசா வந்திடப் போறதில்லை."

"ஃபூல்! காத்திருக்கிறதே எனக்குப் பிரச்னை, அது தெரியமாட்டேங்குதே உனக்கு... ஆனாலும் சிரமப்பட்டு உனக்காகக் காத்திருக்கேன்..."

"தேங்க்யூ...வாங்க போலாம்..."

## 9

மாலை உஷா வங்கியில் இருந்து வீடு திரும்பியபோது வீட்டில் நிசப்தம் நிலவியது. அவளுடைய அப்பாவையும் தம்பியையும் காணோம். அம்மா மட்டும் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தாள்.

உஷா முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டாள்.

''அப்பாவை எங்கேம்மா? வரலையா இன்னும் ஆபீசிலிருந்து?''

''வந்தாச்சே...''

''எங்கே காணோம்?''

''உன் தம்பியையும் கூட்டிட்டு மௌண்ட் வரைக்கும் வாக்கிங் போயிருக்கார்...''

''ஆச்சர்யமா இருக்கு...தம்பி எப்படிப் போனான்?''

''என்னமோ கூப்பிட்டார். கிளம்பிப் போயிட்டான்.''

''சரி-காப்பி தர்ரீங்களா?''

''காப்பி மட்டும் கேக்கத் தெரியு. ஆனா, எங்களைக் கேக்காமலே கல்யாணத்துக்குப் புருஷனை மட்டும் தேடிப்பே!''

-அம்மாவிடம் இருந்து வந்த இந்த எதிர்பாராத வார்த்தைகள் அம்புகளாகப் பாய்ந்து சூழலின் உண்மையை உஷாவிற்கு விண்டு காட்டின. அப்பா என்றைக்கும் இல்லாமல் வாக்கிங் போய்விட்ட மர்மம் இதுதான். திடீர் என திரை விலகி மேடையில் நிற்கிற அதிர்வுடன் நின்ற உஷா, நேருக்கு நேராக அம்மாவைப் பார்த்தாள்.

''எத்தனை நாளாக இப்படித் திட்டம் போட்டிருந்தே...? அப்பா மனசு உடைஞ்சு போயிட்டார். அதெல்லாம் நம்ம குடும்பத்துக்கு சரிப்படாது. அப்படி எதுவும் நடந்தா - கேக்கறவங்களுக்கு எங்களால பதிலும் சொல்ல முடியாது... வீணா குடும்ப கௌரவத்தை நாசமாக்கி; எல்லாருடைய



நிம்மதியையும் கெடுக்காதே... அவ்வளவுதான் சொல்வேன்... எங்களுக்கு நீ செய்யறது பிடிக்கலை - பிடிக்கலை - பிடிக்கலை...''

படபடவென்று கத்திவிட்டு உஷாவின் அம்மா கையில் வைத்திருந்த புத்தகத்தை வெறுப்புடன் மேஜையில் எறிந்து விட்டு மொட்டைமாடிக்குப் போய் விட்டாள்.

உஷா அசையாமல் நின்று கொண்டிருந்தாள். ஒவ்வாத பொருட்களை வாரி முகத்தில் எறிந்து விட்டாற் போலிருந்தது. அவளின் உணர்வுகள் எந்த நிலை கொண்டிருக்கின்றன என்று கவனிக்கின்ற நிதானம் கூட உஷாவிடம் ஏற்படவில்லை. வெறுமனே மனம் பொங்கித் தணிந்து கொண்டிருந்தது. உடனே மனதில் அறைகின்ற மாதிரி அம்மா இப்படிக் கத்தியிருக்க வேண்டாம் என்று தோன்றியது. ஆரம்பமே அயர வைக்கிறது...

உஷா மெல்ல நகர்ந்து சமையல் அறைக்குப் போய்க் காப்பி கலந்து நன்றாகச் சூடு பண்ணித் தனியாக உட்கார்ந்து உறிந்து உறிந்து குடித்தாள். அவளுடைய வாழ்வைத் தனிமை சூழ்வது போலிருந்தது. நினைவு தெரிந்த நாளில் இருந்து பழகி இருக்கின்ற இளம் மஞ்சள் வர்ணம் பூசப்பட்டிருக்கின்ற சமையல் அறைச் சுவர்களைப் பார்த்தாள். அவளுக்குப் போலவே சுவர்களுக்கும் உயிர் இருப்பதாகத் தோன்றியது.

காப்பி குடித்து முடித்துவிட்டுக் கண்களை

மூடி உட்கார்ந்திருந்தாள். அப்போது பெரு
இரைச்சலுடன் விமானம் ஒன்று மீனம்பாக்க
நோக்கிச் சரிந்து கொண்டிருந்தது. உஷ
எழுந்து ஹாலுக்கு வந்தாள். அம்மா இன்னு
மொட்டை மாடியில் இருப்பது தெரிந்தது
உஷா கண்ணாடியைப் பார்த்து லேசாகத்
தலையை வாரிக் கொண்டாள். இப்படியே
தாமரைச் செல்வனின் வீட்டுக்கு ஓடிப் போய்
விடலாமா என்று தோன்றியது.

உறவு என்ற முறையில் எத்தனை
விலங்குகள்? எப்படி - எப்போது இந்த
விலங்குகளை உடைப்பது?

உஷா யோசித்தாள்.

அவளுக்குக் காதலின் இனிமையும்
வேண்டி இருந்தது. பிறந்து வளர்ந்த
குடும்பத்தின் அரவணைப்பும் தேவைப்
பட்டது. இரண்டு பக்கங்களின் எந்த
ஒன்றையும் இழக்காமல் வெற்றி பெறுவது
எப்படி? உணர்வு வயப்படாமல் செயல்பட
வேண்டும் என்பது தெரிந்தது. அக்காவைச்
சந்தித்து விஷயத்தைச் சொல்ல வேண்டும்
என்ற யோசனையும் வந்தது. மெதுவாகப் பட
ஏறி மொட்டை மாடிக்குப் போனாள். அம்ம
திரும்பிப் பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக்
கொண்டாள்.

''இப்ப எதுக்கும்மா இவ்வளவு கோபம் -
நானென்ன கல்யாணமா பண்ணிட்டு வந்து
நின்னுட்டேன்?'' - அம்மாவுக்கு எதிரில் போய்
உட்கார்ந்து கொண்டு உஷா மென்மையான
குரலில் கேட்டாள்.



''கல்யாணத்தைப் பண்ணிட்டு வேற வந்து நிக்கணுமா? அப்பா தனியா இருக்கிற நேரமாப் பார்த்து அவனை அனுப்பி யிருக்கியே - இதுக்கு மேல் நீ என்ன பண்ணணும்?'' அம்மா ஆத்திரத்துடன் கேட்டாள்.

''ஞாயிற்றுக்கிழமை அவர் வந்தது ஆக்சிடெண்ட் தானம்மா. பெரிசா போட்டு அவரை நான் அனுப்பலை. எதிர்பாராமே அப்படி அமைஞ்சது...''

''என்னை மன்னிச்சிடு உஷா. எனக்குப் பேசவே பிடிக்கலை - இந்த விஷயத்தை'' அப்போது கீழே கிருஷ்ணசாமியின் குரல் கேட்டதும் உஷாவின் அம்மா எழுந்து கீழே போய்விட்டாள். உஷாவின் உணர்வுகளில் எந்தப் பதட்டமும் வரவில்லை. மொட்டை மாடியின் குட்டைச் சுவரில் உட்கார்ந்து இருட்டத் தொடங்கியிருந்த வானத்தை உஷா பார்க்க ஆரம்பித்தாள்.

## 10

இரவு சாப்பாட்டுக்குப்பின் உஷாவின் தம்பி வழக்கம் போலப் படுத்துத் தூங்கியதும் உஷாவும் மௌனமாகத் தனது படுக்கையை எடுத்து விரிக்க ஆரம்பித்தபோது கிருஷ்ணசாமி கூப்பிட்டார்.

''உஷா.''

"என்னப்பா?"

"தூங்கப் போறியா?"

"ம்..."

"இங்கே வா; உன்கிட்டே பேசணும்..."

உஷா தயாரான மனநிலையில் வந்தாள்.

"இப்படி உட்கார்."

உஷா உட்கார்ந்தாள். கிருஷ்ணசாமி சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார். சிறிது தள்ளி அவருடைய மனைவி உஷாவை வெறித்துப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள்.

கிருஷ்ணசாமி தொண்டையை லேசாகச் செருமிக்கொண்டு ஆரம்பித்தார்.

"உன் கல்யாணத்துக்கு வரன் பாக்கறதுக்கு ஆரம்பிக்கப் போறேன் உஷா. சில இடங்கள்ல போய் உன் ஜாதகத்தைக் குடுத்திட்டு வந்திருக்கேன்... கல்யாணத்துக்கு நீ தயார் தானே...?"

உஷா பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தாள்.

கிருஷ்ணசாமி தொடர்ந்தார். "நாங்க வரன் பார்க்க ஆரம்பிக்கறதில் உனக்கு எதுவும் ஆட்சேபணை இல்லயே?"

உஷா வெறுமனே அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அப்பா கேக்கறாரில்லே? பதில் சொல்லு..." கிருஷ்ணசாமியின் மனைவி குறுக்கிட்டாள்.



உஷா தலையைக் குனிந்து கொண்டாள். மெல்லிய குரலில் கேட்டாள்:

"அவருக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்?"

"எவருக்கு?"

"தாமரைச் செல்வனுக்கு"

"அவருக்குத்தான் நான் பதில் சொல்லிட்டேனே..."

கிருஷ்ணசாமி இப்படிச் சொன்னதும் உஷா மறுபடியும் பேசாமல் இருந்தாள். கிருஷ்ணசாமி தொடர்ந்தார்.

"இந்த வயசில இப்படிப்பட்ட காதல் ஆர்வங்கள் வர்ரது சகஜம் தாம்மா, நான் இல்லேன்னு சொல்லலை. ஆனா, இந்த வயசில் ஏற்பட்ட இந்த எண்ணம்தான் வாழ்க்கைக்கே ஆதாரம் மாதிரி நெனைச்சிடக் கூடாது. பர்சனலா எனக்கு அந்த தாமரைச் செல்வன்கிட்டே எந்தக் கசப்பும் கிடையாது. ஆனாலும், வேண்டாம்...நாங்க செலக்ட் பண்ற வரனுக்கு நீ வாழ்க்கைப் படறதுதான் உன்னோட தர்மம்...அதுதான் எங்களை நீ கௌரவப்படுத்தற முறையும்...நீ சின்னக் குழந்தை என்கிற தீர்மானத்துக்கெல்லாம் வராதே...அது நம் குடும்பத்தின் பல விஷயங்களையும் பாதிக்கும்...தயவு செஞ்சு அந்தத் தாமரைச் செல்வனுக்கு குட்-பை சொல்லிடு...அருமையான மாப்பிள்ளை உனக்கு நான் பார்த்துத் தடபுடலா ஜாம்ஜாம்னு மறக்க முடியாதபடி நடத்தி வைக்கிறேன்...

அந்த பையனை மறந்திடு...''

கொஞ்சம் உணர்வு வயப்பட்டுவிட்ட கிருஷ்ணசாமியின் குரல் நெகிழ்ந்து, குழைந்து ஒலித்தது. குனிந்தவாறே இருந்த உஷாவின் கண்களில் நீர் மல்கியது. உணர்வுகள் கனத்து நெஞ்சை அடைத்தது. அவளையும் மீறி விம்மல் வெடித்து அழுந்தியது. கிருஷ்ணசாமியும் கண்களைத் துடைத்துவிட்டுத் தொடர்ந்தார்.

''எங்களோட கௌரவமும், சந்தோஷமும்தான் முக்கியம் என்கிற சயநல மனப்பான்மையில் இதையெல்லாம் நான் சொல்லிட்டு இல்லை. உன்னுடைய கௌரவத்தையும் மனசில நினைச்சித்தான் சொல்றேன். நான் ரெண்டு நாள் உனக்கு அவகாசம் தரேன். நல்லா யோசிச்சி உன் முடிவைச் சொல்...ஒரு விஷயம்; இந்த ரெண்டு நாள் நீ பேங்க் போகாமே வீட்ல இருந்து யோசிக்கிறது நல்லது...''

கிருஷ்ணசாமி எழுந்து படுத்துக் கொள்ளத் தயாரானார். உஷாவும் மெதுவாக நகர்ந்து போய் திக்பிரமையுடன் படுத்துக் கொண்டாள்.

---

## 11

---

இயல்புக்கு மாறாக வாழ்க்கை மிக நெருக்கமாக சூழ்ந்து கொண்டிருந்தத் போலிருந்தது உஷாவுக்கு. வீட்டு மனிதர்கள்



மட்டும் இல்லாமல் வீட்டுச் சுவர்களும் பண்டங்களும் கூட அவளுடன் அந்நியத் தன்மைகொண்டாற்போல் தெரிந்தன. தொலைக்காட்சிப் பெட்டியின் அருகில் போகக்கூட பிடிக்கவில்லை அவளுக்கு. அப்பாஅவளுடன் இயல்பாக இருக்க முயற்சி செய்தார். அம்மா அந்த முயற்சி கூட செய்யவில்லை. உஷாவிடம் இருந்து சிறிது விலகியே இருந்தாள். அது உஷாவை எரிச்சல் அடைய வைத்தது. வீட்டை விட்டு ஓடிப் போனால் தேவலையென்று தோன்றியது. பெயருக்குச் சாப்பிட்டாள். பாத்ருமில் நிறைய நேரம் நின்று குளித்தாள். தூங்குவது போல கண்களை மூடிப்படுத்தே கிடந்தாள். எல்லோர்மீதும் கோபம் வந்தது. மனிதர்கள் அனைவருமே சயநலக்காரர்கள் எனத் தோன்றியது. தாமரைச் செல்வனுக்கு அவனுடைய அம்மாவின் சந்தோஷத்துக்காக உடனே கல்யாணத்தை வைக்க வேண்டும். தாமரைச் செல்வனை மறந்து விட்டால் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் சந்தோஷம். தனக்கு எது சந்தோஷம் என்று உஷா நினைத்துப் பார்த்தாள். எந்த சந்தோஷமும் தனக்கு வேண்டாம் என்று தோன்றியது. கல்யாணமே செய்து கொள்ள வேண்டாம் என்ற ஆத்திரம் வந்தது. எதற்குக் கல்யாணம்? ஒரு மனுஷி கல்யாணம் செய்து கொள்ளாமல் வாழ முடியாதா? பாதுகாப்பான பேங்க் வேலை இருக்கிறது. பணம் தானே ரொம்பவும் முக்கியம்...பணம் இல்லாமல் ஒரு நாள் பொழுதை ஓட்ட முடியுமா?

எதிர்மறையாகவே உஷா யோசித்து
கொண்டிருந்தாள். இரண்டு நாள் போ
மூன்றாவது நாளும் அவள் பேங்
போகவில்லை. ஆனால், கிருஷ்ணசாமி
அவளை எதுவும் கேட்கவில்லை. நான்காவது
நாளும் அவள் ஆபீஸ் போகிற அடையாளம்
எதுவும் தெரியாததால் உஷாவைக்
கேட்டுவிட்டார்.

''ஆபீஸ் போகலையா உஷா?''

''இந்த வாரம்பூரா போகப் போறதில்லை...''

''நல்லதுதான். பேசாமே படுத்து நல்லா
ரெஸ்ட் எடு... நான் உனக்கு வரன் பார்க்கிற
வேலையை ஆரம்பிக்கிறேன்...''

''ஸாரிப்பா. இப்ப எனக்கு கல்யாணம்
வேண்டாம்...''

''நீ வேற மாதிரி ரீயாக்ட் பண்றேன்னு
நெனைக்கிறேன்.'' கிருஷ்ணசாமி
மாற்றமடைந்த குரலில் சொன்னார்.

''நான் ரீயாக்ட்டே பண்ணக் கூடாதுன்னு
நெனைக்கிறீங்களா?''

''ரீயாக்ட் பண்றது உன்னோட உரிமை
ஆனா உன்னோட ரீயாக்ஷன் நம்
குடும்பத்தோட அமைதியைக் குலைச்சிடக்
கூடாது... இப்ப ஏன் உனக்குக் கல்யாணம்
வேண்டாம்னு சொல்றே?''

''மனசால நான் இன்னும் தயாராகலை...''

இதைக் கேட்டு உஷாவின் அம்மா
குறுக்கிட்டாள். ''அந்தப் பையனைக்
கல்யாணம் செய்துக்க மட்டும் இப்பவே



தயாராகத்தானே இருந்தே...?''

-கிருஷ்ணசாமி அவசரமாக மனைவியைத் தன் குரலை உயர்த்தி அடக்கினார்.

''நீ பேசாமே இரு...''

உஷா அம்மாவிற்குப் பதில் சொன்னாள்: ''நான் ஒண்ணும் இப்பவே அவரைக் கல்யாணம் பண்ணிட்டு ஓடணும்னு திட்டம் போடலை. அவரோட அம்மாவுக்கு ஹெல்த் சரியில்லை. அதனால் உடனே கல்யாணத்தை வச்சிக்கலாம்னு அவர்தான் அவசரப்பட்டார்...''

''அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு நீ சம்மதிச்சதாலே தான் இங்கே வந்தான்...'' - மறுபடியும் அவளுடைய அம்மா குறுக்கிட்டாள்.

''எனக்கும் அவரைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு தோணிச்சி-அதனால சொன்னேன்... அது தப்பா?''

''எங்ககிட்டே சொல்லாமே எங்களுக்குத் தெரியாத ஒரு பையன்கிட்டே அவனைக் கல்யாணம் பண்ணிக்க நீ சம்மதிக்கிறது- எங்களைப் பொறுத்தவரையில் தப்புதான் உஷா...''

''நான் அப்படி நினைக்கலை. உங்ககிட்டே சொல்லாமே உங்களுக்குத் தெரியாமே ஒருத்தனை நான் கல்யாணம் செய்திருந்தால்தான் தப்பு...''

''இப்ப நீ என்ன சொல்றே? அவனைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொல்றியா?''

- உஷாவின் அம்மா பொறுமை இல்லாமல் எரிச்சலுடன் கேட்டாள்.

உஷா பேசாமல் நின்றாள்.

''அதையும் வாயைத் திறந்து சொல்லிடேன்''

''இப்ப எனக்குக் கல்யாணம் வேண்டாம்னுதான் சொன்னேன்...''

''ஏன் வேண்டாம்னு தெரியணும் எங்களுக்கு...''

''சொன்னேனே-மனசால நான் இன்னும் கல்யாணத்துக்கு தயாராகலைன்னு...''

''இல்லை. உண்மையான காரணம் இது இல்லை.''

''என் வார்த்தையை நம்பறதும் நம்பாததும் உங்கள் இஷ்டம்...''

சிறிது நேரம் அவர்களிடையே நிசப்தம் நிலவியது.

''பொம்பளைப் பிள்ளைங்களைப் படிக்க வச்சி; வேலைக்கு அனுப்பினா இந்தப்பாடு தான். தலையில என்ன எழுதியிருக்கோ- அதை அனுபவிச்சித்தானே தீரணும்...''

உஷாவின் அம்மா ஆத்திரத்துடன் சொல்லிவிட்டு வேகமாக சமையல் அறைக்குள் நுழைந்து கொண்டாள். நேரமாகி விட்டதால் கிருஷ்ணசாமி ஆபீசுக்குக் கிளம்பிச் சென்றார். உஷாவின் தம்பி பள்ளிக்கூடம் புறப்பட்டுப் போயிருந்தான். வீடு நிசப்தமாக இருந்தது.

உஷா மௌனமாக, புன்னகை செய்து



கொண்டாள். அவளுக்குள் கவிந்திருந்த மெல்லிய பய உணர்ச்சி அகன்றிருந்தது. வெற்றி கிடைக்குமோ, கிடைக்காதோ- பெற்றோர்களை வலிமையுடன் எதிர்கொள்ள முடியும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. காதலுடன் தாமரைச் செல்வனை நினைத்தாள்.

## 12

உஷா தொடர்ந்து வங்கிக்கு வராமல் இருந்தது தாமரைச் செல்வனை தவிப்படையச் செய்துவிட்டது. உஷா வராத காரணம் எதுவாக இருக்கும் என்பதை பலவாறாக நினைத்து நினைத்து மனசு குழம்பியது. வேலையில கவனமே செல்லவில்லை. அலுவலகத்தில யாரிடமும் வெளியிட்டுக் கொள்ள முடியாத ஆதங்கத்தை வீட்டில அம்மாவிடம் தெரிவித்துக் கவலைப்பட்டான்.

''காரணம் என்னன்னு தெரிஞ்சா கூட ஒரு வகையில் நிம்மதியா இருந்திடலாம். காரணமே தெரியலையே...''

''ஆபீஸ்ல யாருக்குமே சொல்லாமலா லீவ் போட்டிருப்பா...?''

''லீவ் போட்டது தெரியும்மா. ஆபீசருக்கு போன் பண்ணி - ஃபார்மாலிட்டிக்காக ஏதாவது ஒரு காரணம் சொல்லியிருப்பா...

அதை நாம கன்சிடர் பண்ண வேண்டியதில்லை. உண்மையான காரணம் தெரியலையே...''

''ஆபீசருக்கு போன் பண்ணி லீவ் சொன்ன பொண்ணு - அப்படியே உன்னைக் கூப்பிட்டும் விஷயத்தைச் சொல்லி இருக்கலாமே...''

''போன் பண்ணினபோது அவளோட அப்பாவும் பக்கத்தல இருந்தாரோ என்னமோ...''

''இருந்தா என்ன; பேசக்கூடவா தடை பண்ணுவாரு?''

''உஷாவுக்கு வேற பிராஞ்சுக்கு மாற்றம் செய்திடுவார்ம்மா''

''மாற்றல் வாங்கினா பொண்ணோட மனசு மாறிடுமாய்யா?''

''பிராஞ்ச் மாறினாலே தேவை இல்லாத இழுபறி தானேம்மா...

இன்ஃப்ளுயன்ஸ் இருந்தா எப்ப வேணுமானாலும் மாறலாம்...அதுவும் உஷாவோட அப்பா எல்லாவிதமான நெளிவு சுளிவும் தெரிஞ்ச ரொம்ப புத்திசாலி மனுஷர். அவரால் முடிஞ்ச வரைக்கும் பார்ப்பார்.''

''என்னமோ - இன்னிக்குக் காலையில் எந்திருச்சபோது எனக்குத் தலையைச் சுத்திட்டு கீழே விழுற மாதிரி இருந்தது. சட்டுப்புட்டுன்னு உன் கல்யாணம் முடிஞ்சா தேவலை...''

''அவ அப்பாகிட்டே போய்ப் பேசிட்டு வந்தாச்சி. அவர் ஒண்ணும் மசியற ஆளா



தெரியலை...இனி விஷயம் உஷா கையில்தான்...''

''நீ வேணும்னா-சும்மா போய் உஷாவை வீட்லபோய்ப் பார்த்திட்டு வாயேன்...''

''வேற வினையே வேண்டாம்!''

''உடம்பு சரியில்லையோன்னு நெனைச்சிப் பாக்க வந்தேன்னு சொல்லு.

தலையையா சீவிடு வாங்க...? விஷயத்தை ஆறப்போடக்கூடாது. அதுக்குத்தான் சொல்றேன்...''

''எம்மா-நெசமாவா உஷாவைப் போய்ப் பாத்திட்டு வரச் சொல்றீங்க?''-தாமரைச் செல்வன் நம்ப முடியாமல் கேட்டான்.

''நெசமாத்தான்ய்யா சொல்றேன். தைரியமா போய்ப்பார். அப்பத்தான் - ரெண்டுல ஒண்ணு சட்டுப்புட்டுன்னு முடியும்.. சும்மா திசையே தெரியாமே ஓடிட்டு இருக்க முடியாது...''

தாமரைச் செல்வன் யோசித்தான். தான் உஷாவின் வீட்டுக்குப் போகிற சம்பவமே உஷாவின் அப்பாவை மேலும் எதிர் மறையில் சீண்டி விடக்கூடாதென்று தோன்றியது. பல்வேறான சிந்தனையில் மூழ்கி இருந்தான். அவனுடைய அம்மாதான் அவனை தூண்டி விட்டாள்.

''யோசிக்காமே போய்ப் பாத்திட்டு வாய்யா... அவளோட அப்பா எப்படி வேணுமானாலும் நெனைச்சிக்கட்டும். அந்தப் பொண்ணுக்கு மனசுக்கு ஆறுதலா

இருக்கும்...''

''சரிம்மா. இப்பப் போனா உஷாவோட அப்பாவும் இருப்பார். அவரும் இருக்கிற நேரத்ல போறதுதான் மரியாதை. அவர் இல்லாத நேரமா பார்த்துப் போனா-தப்பா ரீயாக்ட் பண்ணிடுவார்...அது சரி கிடையாது. இப்பவே போறேன்.''

தாமரைச் செல்வன் உடை மாற்றி உடனே கிளம்பி விட்டான்.

# 13

ஐந்து நாட்களுக்கு முன்பு சென்றிருந்த உஷாவின் வீட்டிற்கு தாமரைச் செல்வன் இரண்டாவது முறையாகப் போய்; முன் வராந்தாவில் காலணிகளை விட்டான். கதவருகில் நின்று; திறந்திருந்த கதவில் விரலால் தட்டி ஓசை எழுப்பினான்.

''யாரு?''-என்று கேட்டவாறே கிருஷ்ணசாமி எழுந்து வந்தார். தாமரைச் செல்வனைப் பார்த்ததும் அவரின் நெற்றி சுருங்கியது. அவ்ரைப் பார்த்ததும் தாமரைச் செல்வன் பணிவுடன் வணங்கினான். கிருஷ்ணசாமி அவனை வீட்டுக்குள் அழைக்கவில்லை.

''என்ன வேணும்?'' என்று வெறுப்புடன் கேட்டார்.

''உஷா நாலைஞ்சு நாளா ஆபீசுக்கு



வரலையே - உடம்புக்கு எதுவும் சரியில்லையோன்னு பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்.''

தனக்குப் பரிச்சயம் இல்லாத குரலாக இருக்கிறது என்ற நினைப்புடன் கிருஷ்ணசாமியின் மனைவி சமையல் அறையில் இருந்து வேகமாக வந்தாள். கிருஷ்ணசாமி தாமரைச் செல்வனை மனைவிக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை.

''உஷா இல்லை...'' என்றார் வெறுமனே.

''யாரு இது?'' - உஷாவின் அம்மா கேட்டார் கணவரைப் பார்த்து.

''அப்புறம் சொல்றேன்...'' என்ற கிருஷ்ணசாமி தாமரைச் செல்வனைப் பார்த்துக் கூறினார்.

''ஸாரி தம்பி; உஷாவைப் பார்க்கறதுக்காக நீ இங்கே வந்திருக்க வேண்டாம். நீ ரொம்ப பிளான் பண்ணிப் புத்திசாலித்தனமா 'ப்ளே' பண்ணப் பார்க்கறே...அவள் ஆபீசுக்கு வராத விஷயத்தில் கூட உனக்கு சாதகமாக ஒரு துஷ்ப்ரயோகத்தை ரொம்ப தைரியமா செயல்படுத்திப் பாக்கறே...''

''இல்லை சார்...அப்படியெல்லாம் இல்லை. நீங்க தப்பான கோணத்திலேயே இதையும் பாக்கறீங்க...உண்மையிலேயே உஷாவுக்கு உடம்பு சரி இல்லையோ என்கிற எண்ணத்தில்தான் வந்தேன்...உஷா என்கூட வேலை பார்க்கிற பெண் என்கிறது பொய் ஆயிடாது...''

"அவள் கூட வேலை பார்க்கிற வேறு யாரும் பார்க்க வரலையே...!"

"அதுக்குக்கூட நான்தானா பலி? யாரும் வரலை என்கிறதுக்காக நானும் வரக்கூடாதா? புரியலை உங்க நியாயம்!"

"புரியாத மாதிரி நடிக்கிறதால உனக்கு ஒரு பைசா லாபம் கிடையாது."

"லாப நஷ்டம் பார்க்கிறது உங்களுக்குப் பழக்கமா இருக்கலாம்."

கிருஷ்ணசாமியின் முகம் இதைக் கேட்டதும் சிவந்தது. "நீ ஒரு மாதிரியான மன வன்முறைக்குத் தயாராகிறே தாமரைச் செல்வன்."

"அது உண்மையா இருந்தா-அதுக்குப் பொறுப்பாளி நீங்கதான்..."

"எங்கக் குடும்ப நிம்மதியை நாசம் பண்றதுன்னு முடிவு கட்டிட்டே போலிருக்கு... இதோ பார்... இனிமே எந்தக் காரணத்தைக் கொண்டும் எங்க வீட்டுப்படி ஏறாதே...ஏறினே, உன் பேங்க் படி ஏறிடுவேன் நான்! உன் பேங்க் பிராஞ்ச் மேனேஜரைப் பார்த்து உன் மேல கம்ப்ளைண்ட் பண்ணுவேன் ஜாக்கிரதை..."

"பர்சனல் மேட்டரை ஆபீஸ் விஷயமா ஆக்காதீங்க."

"உனக்கும் எனக்கும் பர்சனல் மேட்டர் எதுவும் கிடையாது..."

-கிருஷ்ணசாமி கோபத்தில் இரைந்தார்:

தாமரைச் செல்வன் ஒரு நிமிஷம் பல்லைக்



கடித்தபடி அவரைப் பார்த்தான். பின் காலணிகளை மாட்டிக் கொண்டு வேகமாக வெளியேறிப் போனான்.

---

## 14

---

**கோ**விலில் இருந்து வீடு திரும்பிய உஷாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. தாமரைச் செல்வன் அவளைப் பார்க்க வந்த விஷயம் தேவை அற்றதாகத் தெரிந்தது. வீட்டில் அவளுடைய நிலைமை அனாவசிய சிக்கலுக்குள்ளாகி இருந்தது. உஷாவின் அம்மா கத்தினாள்.

"இப்ப என்ன குடி முழுகிப் போச்சுன்னு உன்னைப் பார்க்கறதுக்கு அப்படி ஓடி வந்தான்? எல்லாம் நீ குடுத்திருக்கிற தைரியம்தான். வேறென்ன? குடும்ப கௌரவமே போச்சி. இன்னும் கொஞ்ச நாள் போனா-நேரா வந்து உன்னை இழுத்திட்டே போயிடுவான்; அப்படிப்பட்ட முரடனா இருக்கான்! எவ்வளவு திமிரா பேசினான்..போய் சொல்லி வை அவனை...இந்த மாதிரியெல்லாம் வீட்டுக்கு வந்து வந்து நின்னா-என் தம்பிகிட்டே சொல்லி அவனைக் காலை ஒடிக்கச்சொல்லிடுவேன்...ஜாக்கிரதையா இருக்கச் சொல்லு..."

-உஷா அன்று பூராவும் வாயைத் திறக்கவே இல்லை. ஆபீஸ் போனதும் சாயந்தரம் மிக

சீக்கிரமே தாமரைச் செல்வனும் அவளும் நடேசன் பார்க்கில் சந்தித்தார்கள்.

பேச்சின் ஆரம்பத்திலேயே உஷா சொல்லிவிட்டாள்.

''அன்னைக்கு நீங்க எங்க வீட்டுக்கு வந்திருக்கவே கூடாது தாமரை...வீட்டுல என் நிலைமையைப் பயங்கரமா பாதித்திருச்சி...''

''தப்பு உன் மேலதான் உஷா. ஒரே ஒரு போன் எனக்குப் பண்ணிச் சொல்லியிருக்கலாமே. நீ திடீர்னு ஆபீசுக்கு வரலை. என்ன விபரம்னு தெரியலை. ஒரே டென்ஷன் ஆயிடுச்சி எனக்கு... என்னென்ன பயங்கர கற்பனையெல்லாமோ வந்தது. வீட்ல புலம்பிக்கிட்டுக் கிடந்தேன். அம்மாதான் போய் பாத்திட்டு வான்னு சொன்னாங்க. அவங்க சொன்னதாலே தான் கிளம்பி வந்தேன். இல்லேன்னா வந்திருக்க மாட்டேன். கடைசியில் நான் வந்தது தப்பாப் போச்சு...''

''என்னால என் வீட்ல இருக்க முடியலை தாமரை... யாரையும் ஃபேஸ் பண்ணக் கூட முடியலை. ஒரே டென்ஷன்...ஏதோ நான் இம்மீடியட்டா வீட்டை விட்டு ஓடிப் போறதுக்குத் தயார் ஆயிட்ட மாதிரியான பார்வை-எல்லோருக்கும். என் தம்பி கூடப் பேசறதில்லை சரியா என்கிட்டே....அவ்வளவு மோசமா இருக்கு என் நிலைமை...காயைத் தப்பா நகர்த்திச் சிக்கலாக்கிட்டீங்க...''

''என்ன சிக்கலாக்கிட்டேன்? உன்னால என்னைக் கல்யாணம் செய்துக்க



முடியாதுன்னு சொல்றியா?''-தாமரைச் செல்வன் எரிச்சலுடன் கேட்டான்.

''உடனே இப்படிக் கேட்டுடுங்க...'' -பதிலுக்கு உஷாவும் எரிச்சலைக் காட்ட, இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள்.

பின் உஷா சொன்னாள், ''உங்க அம்மா 'போய் பாரு'ன்னு சொன்னதும் உங்களால எங்க வீட்டுக்கு வர முடிஞ்சதே...அந்த மாதிரி எங்க அம்மாவும் சொல்ற ஏதோ ஒண்ணுக்கு நானும் ஒரேடியா மாக்கட்டை மாதிரி இருந்திட முடியாது தாமரை...ஏதாவது ஒரு வகையில் நானும் தான் ரீயாக்ட் பண்ணியாகணும்...நான் அவங்க சொல்லை மீறி உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன் என்கிற தாலேயே-கடுகளவுகூட அவங்ககிட்டே எனக்கு 'இமோஷனல கமிட்மெண்ட்' எதுவும் இருக்கவே கூடாதுன்னு எதிர்பார்க்காதீங்க...''

''இனிமே இந்த ஜென்மத்தல உங்க அப்பா அம்மா முகத்தல நான் முழிக்கவே மாட்டேன், உஷா. அது மட்டும் உறுதி...'' தாமரைச் செல்வன் கோபத்துடன் சொன்னான்.

''இதெல்லாம் தேவை இல்லாத உறுதி! வீணா வீட்டுக்கு வருவானேன்... வினையை வாங்குவானேன்...?!''

''நீ என்ன ஆனேன்னு தெரிய வேண்டாமா எனக்கு?''

''எனக்கு என்ன ஆயிடப் போகுது? இதென்ன சினிமாவா - உடனே எவனையோ

அவசர அவசரமா இழுத்துட்டு வந்து என்னையும் அவனையும் மண அறையில் உட்கார வைக்கிறதுக்கு...? வாழ்க்கை தாமரை; வாழ்க்கை! அவசரப்பட்டுக் காயை நகர்த்திடக் கூடாது! நகர்த்தினா - இந்த அவமரியாதைகள்தான், டென்ஷன்தான். நான் எவ்வளவு நிசப்தமா இறுக்கமா விஷயத்தை டீல் பண்ணிட்டு வந்தேன் தெரியுமா? என் அப்பா எனக்கு வரன் பார்க்க ஆரம்பிக்க இருந்ததை மறுத்திட்டு நான் பாட்டுக்கு அமைதியா இருந்தேன்...திடீர்னு ஒரு விசிட் பண்ணி அவர்களை ரொம்ப மோசமா ரீயாக்ட் பண்ண வச்சிட்டீங்க... பாருங்க; எங்க அப்பா தீவிரமா எனக்கு மாப்பிள்ளை பார்க்கறதுக்கு ஆரம்பிச்சு- எவ்வளவு சீக்கிரமா என் கல்யாணத்தை நடத்தணுமோ அவ்வளவு சீக்கிரமா நடத்தறதுக்குப் பார்ப்பார்...வீட்ல இனிமே ஒரே சண்டைதான் டெய்லி...''

''ஏன் சண்டை போட்டுட்டு அவங்க கூட இருக்கணும்? தூக்கி எறிஞ்சிட்டு வந்திடு...நாம பண்ணிப்போம் உடனே கல்யாணம்....''

''என்னால தூக்கியெல்லாம் எறிய முடியாது தாமரை. கொஞ்சம் கொஞ்சமாத்தான் பூ உதிர்கிற மாதிரி உதிர முடியும்... எனக்குன்னு ஒரு நேச்சர் இருக்கு இல்லையா? உங்க மேலேயே திடீர்னு ஒரே நாளிலேயா எனக்கு காதல் ஏற்பட்டது? ஒரு பூ மலர்ற மாதிரிதானே எனக்குள் காதல் மலர்ந்தது...''



சிறிது நேரம் தாமரைச் செல்வன் உஷாவை மிகவும் இறுக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுச் சொன்னான்.

''நீ சொல்றது சரிதான் உஷா...பூ மாதிரி உதிருவேன்னு சொல்றது ஒரு வகையில் கரெக்ட்தான். ஆனா-பூ வாடிப் போகும் போதுதான் உதிரும்! அதை மறந்திடாதே...''

உஷா இனிய அதிர்வுடன் தாமரைச் செல்வனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் அவளைப் பார்க்க விரும்பாமல் எங்கேயோ பார்த்தான். உஷா மெல்லிய குரலில் சொன்னாள்;

''இந்தப் பூ வாடாத பூ தாமரை! ஒரு நாளும் வாடவே வாடாது. போதுமா?''

''போதாது...இந்தப் பூ எனக்கு இந்த நிமிஷமே வேணும்...''

உஷா யோசித்தாள். பின்பு சொன்னாள்;

''இன்னும் ஒரே ஒரு வாரம் அவகாசம் தாங்க தாமரை. அதாவது மன அவகாசம். என் மனசு நீங்க கேட்ட அந்த நிமிஷத்துக்குத் தயார் ஆகணும்...அதுக்காக அவகாசம் தாங்க.''

''இந்தப் பூ எனக்குத்தானே சொந்தம்...?'' தாமரைச் செல்வன் குரல் நெகிழக் கேட்டான்.

''அதைத் தீர்மானிக்கிறது பூ இல்லை! வாங்க போகலாம். ரொம்ப லேட்டா போனா அதுக்கு வேற அர்ச்சனை கிடைக்கப் போகுது...''

உஷாவும், தாமரைச் செல்வனும் வீட்டுக்குப் போக எழுந்து கொண்டார்கள்.

# 15

**வீ**டு திரும்பியபோது தாமரைச் செல்வன் உற்சாகமாக இருந்தான்.

''என்னய்யா... அந்தப் பொண்ணு உஷா இன்னைக்கு ஆபீசுக்கு வந்தாளா இல்லையா?'' - அவனின் அம்மா கேட்டாள்.

''வந்திருந்தாம்மா.''

''ஏன் போன வாரம் பூராவும் வரலையாம்...?''

''சும்மா வீட்ல ஒரு ஸ்டண்ட் அடிச்சிருக்கா!''

''திடீர்னு ஆபீஸ் போகாம வீட்ல இருக்கறது ஸ்டண்ட்டா?''

''ஒழுங்கா - லீவு போடாமே ஆபீஸ் போகிற பெண் திடீர்னு ஒரு காரணமும் இல்லாமே வீட்ல உட்கார்ந்திட்டா - அவளோட அப்பா அம்மாவுக்கு ஒரு மாதிரி தானே இருக்கும் - அதுவும் நான் வேற அவங்க வீட்டுக்குப் போய் வந்து கலாட்டால்லாம் ஆகியிருக்கிற இந்த சமயத்ல...''

''என்ன சொல்றா? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிற ஐடியாவில் தான் இருக்காளா?''

''அதில் எல்லாம் ஒரு மாற்றமும் கிடையாதும்மா. ஆனா, ஒரே பிடியா வீட்டை முறைச்சிக்கிட்டு; பெரிய சண்டை சச்சரவெல்லாம் பண்ணிட்டு வர்ர ஐடியா



இல்லை உஷாவுக்கு.. ஆனாலும், ஒரு நாள் அப்பா அம்மாவுக்கு குட்-பை சொல்லிட்டு வந்திடுவா. அதில் இனிமே எந்தச் சந்தேகமும் கிடையாது... அதுக்கு நாம கொஞ்சம் அவகாசம் கொடுத்துத்தான் ஆகணும்-அவளுக்கு.''

''ரெண்டு மூணு மாசத்ல வந்திட்டா தேவலை...''

''அதுக்குள்ளே வந்திடுவாம்மா... ஜோசியர்கிட்டே சொல்லி ரெண்டு மூணு நல்ல தேதிகள் பார்த்து வச்சிடுங்க. வசதியான தேதியில் கல்யாணத்தை வச்சிக்கலாம்...''

''சீக்கிரமா முடிஞ்சிட்டா தேவலை... என் உடம்பை நெனைச்சா பக் பக்னு அடிச்சுக்குது. அடிக்கடி கண்ணை இருட்டிக்கிட்டு தலையைச் சுத்தற மாதிரி இருக்குது...''

''வாங்கம்மா. டாக்டர்கிட்டே போய்க் காட்டிட்டு வந்திடலாம். நீங்களும் டாக்டர்கிட்டே போயிட்டு வந்து பத்து நாள் இருக்குமே...''

''இருப்பாரா டாக்டர் - இந்த நேரத்ல...?''

''இருப்பார் இருப்பார்...''

''இரு. வேற சேலையை மாத்திட்டு வர்றேன்...''

தாமரைச் செல்வனின் அம்மா சேலை மாற்றிக் கொள்வதற்காக அறைக்குள் போனாள்.... அவனும் பாத்ரூம் போய் முகத்தைக் கழுவித் துடைத்து விட்டுக் கண்ணாடியின் முன் நின்று தலையை வாரித் தயாரானான். அம்மா வரட்டும் என்ற

நினைப்பில் வாசலில் போய் நின்றான். எதிர்வீட்டு வாசலில் சில இளம் வயது பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள். தாமரைச்செல்வன் செருக்குடன் அப்பெண்களில் யாரையும் பார்க்காமல் வேறெங்கோ பார்த்தான்.

பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டன. அம்மா இன்னும் வராததைக் கண்டு தாமரைச் செல்வன் வாசலில் இருந்தே ''அம்மா'' என்று குரல் கொடுத்தான். எதிர்வீட்டு வாசலில் நின்ற பெண்கள் - தங்களுடைய கவனத்தைக் கவர்வதற்காகத்தான் அவன் பெரியதாக 'அம்மா' என்று குரல் கொடுப்பதாக நினைத்துத் தங்களுக்குள் புன்னகை செய்து கொண்டார்கள். தாமரைச்செல்வன் அவனையும் மறந்து சில கணங்கள் அந்தப் பெண்களைக் கவனித்துவிட்டு வாட்சைப் பார்த்தான். 'என்ன; சேலை மாற்றப் போன அம்மா இன்னும் வரக் காணோம்?'

தாமரைச் செல்வன் மறுபடியும் வாசலில் நின்று 'அம்மா' என்று மேலும் பெரிய குரலில் கூப்பிட்டான்.

பதில் இல்லை.

'அம்மா...' - கொஞ்சம் உள்ளே நகர்ந்து வந்து கூப்பிட்டான்.

பதில் இல்லை.

அச்சம், தாமரைச் செல்வன் ரத்த ஓட்டம் பூராவிலும் குபீரெனப் பாய்ந்தது.

வேகமாக அறைக்குள் சென்று பார்த்தான். அவனுடைய அம்மா அமிர்தவல்லி



சேலையைக்கூட மாற்றாமல் கீழே விழுந்து கிடந்தாள். அவளின் உடம்பு இயல்புக்கு மாறாக - ஓர் உடைந்த கிளைபோல புரண்டிருந்தது. 'அம்மா' என்று அலறிய தாமரைச் செல்வன் பதறிக் குனிந்து பார்த்தான். திறந்திருந்த அம்மாவின் கண்களில் உயிர் இருந்தது. தாமரைச் செல்வன் ஆட்டோ கொண்டு வர எழுந்து தெருவில் ஓடினான்.

## 16

வங்கியின் வேலை நேரம் தொடங்கி முப்பது நிமிடங்கள் ஆகியும் தாமரைச் செல்வன் வராதது உஷாவிற்கு ஒரு மாதிரியாக இருந்தது. அன்று பூராவும் அவன் வராவிட்டால் சாயந்தரம் சீக்கிரமே கிளம்பி அவனின் வீட்டுக்குப் போய் பார்க்க வேண்டும் என்றும் நினைத்தாள். அவனுடைய அம்மாவிற்கு உடம்பு சரியில்லாமல் போனாலும் போயிருக்கலாம் எனத் தோன்றியது. பதினோரு மணி அளவில் உஷா அவளுடைய வேலையில் ஆழ்ந்து போயிருந்தபோது தாமரைச் செல்வனிடம் இருந்து அவளுக்கு போன் வந்தது.

''ஹலோ... உஷா பேசறேன்.''

''உஷா! நடக்கக்கூடாதது நடந்திருச்சிம்மா... எங்க அம்மாவை ஆஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருக்கோம்.. அவங்களுக்கு

பேராலிசிஸ் அட்டாக் பண்ணியிருக்கு...''

தாமரைச்செல்வன் படபடப்புடன் பேசினான். அவனுடைய குரலில் அழுகையின் விம்மலை உணர முடிந்தது. சிறிதும் எதிர்பாராத செய்தி கேட்ட உஷா ஸ்தம்பித்து போனாள். பேசக்கூட அவளுக்கு நாக்கு எழவில்லை. வேறொரு பிசகாத கணிதங்களில் வாழ்வின் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது கண்கூடாகத் தெரிந்தது. தாமரைச் செல்வன் தொடர்ந்து பேசினான்:

''அம்மாவை இன்டென்சிவ் கேர் யூனிட்லதான் வச்சிருக்காங்க...

எழுபத்திரெண்டு மணி நேரம் தாண்டனும்னு டாக்டர்கள் சொல்லியிருக்காங்க...''

''அம்மாவை எந்த ஆஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருக்கீங்க தாமரை?''

''மயிலாப்பூர் மஞ்சுளா மருத்துவமனையில்...''

''உங்க ரெண்டு தங்கச்சிகளுக்கும் ந்யூஸ் போயிடுச்சா?''

''இப்பத்தான் போன்ல மெஸேஜ் குடுத்தேன்...''

''இப்ப வேற யார் ஆஸ்பிட்டல்ல உங்க கூட இருக்காங்க?''

''வண்ணாரப்பேட்டை சித்தி வந்திருக்காங்க...''

''நான் மூணு மணிக்குக் கிளம்பி வரேன். காலையில எதுவும் சாப்பிட்டீங்களா?''



''இப்பத்தான் சாப்பிட்டேன்...''

''வேளா வேளைக்கு சாப்பிட்டு உங்க உடம்பையும் கவனிச்சிக்குங்க...அது ரொம்ப முக்கியம். நீங்க ஆஸ்பிட்டல் ரிஸப்ஷன்ல இருங்க - நான் கரெக்டா மூணு மணிக்கு ஆட்டோ பிடிச்சு வந்திடறேன்.

''மூணு மணிக்கு கண்டிப்பா வந்திடு உஷா... நான் ரொம்பவும் அப்செட் ஆயிருக்கேன்.''

''கரெக்ட்டா நான் வந்திடறேன் - கவலைப்படாம இருங்க...''

உஷா ரிஸீவரை வைத்தாள். அதற்குள் வங்கியில் ஆங்காங்கு செய்தி பரவி விட்டிருந்தது.

தன்னுடைய இடத்தில் வந்து அமர்ந்த உஷாவின் மனம் இன்னும் ஸ்தம்பித்தே போயிருந்தது. இந்த சம்பவம் திடீரென்று ஏன் நிகழ வேண்டும் என்ற கேள்வி அவளுக்குள் எழுந்தது. தாமரைச் செல்வனின் அம்மா இறந்து போய்விட நேரிடுமோ? அந்த மரணம் நிகழ்ந்தால் என்ன நடக்கும்? அந்த நிலையில் உஷாவால் சிந்தித்தே பார்க்க முடியவில்லை. தாமரைச் செல்வனின் அம்மாவுக்கு இந்த நிலை ஏற்பட்டிருப்பது நல்லதற்கா, கெட்டதற்கா? தன் அறிவுக்குப் புலப்படாத பொருள் ஒன்று மறைந்திருப்பது போலிருந்து உஷாவிற்கு. வங்கியில் அவளுக்கு வேலையே ஓடவில்லை. மனசில் குழப்ப அலைகள் புரண்டு கொண்டேயிருந்தன. தாமரைச் செல்வனின்

அம்மாவை சந்தித்திருக்கிற சம்பவங்களை நினைத்துப் பார்த்தாள். இப்போதைய சம்பவங்கள் அந்தப் பெண்மணியின் உடம்பில் பக்கவாதம் என்ற தாக்குதலைச் சுற்றி ஒடுங்கிச் சுழலத் தொடங்கியிருப்பது தெரிந்தது. பெருமூச்சுடன் உஷா வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

---

## 17

---

மஞ்சுளா மருத்துவமனையில் தாமரைச் செல்வனைப் பார்த்த உஷா அதிர்ந்து விட்டாள். பத்து நாட்கள் சாப்பிடாதவன் போல இருந்தான், அவன்.

''அம்மா எப்படி இருக்காங்க தாமரை?''

''இம்ப்ருவ்மெண்ட் எதுவும் இருக்கிற மாதிரி தெரியலை உஷா...''

''மத்யான சாப்பாடு சாப்பிட்டீங்களா இல்லையா...?''

''இப்பத்தான் டிபன் சாப்பிட்டேன்...''

''உங்க சித்தி எங்கே இருக்காங்க...?''

''உள்ளே... அம்மாவை நெனைச்சா பயமா இருக்கு உஷா... திடீர்னு அவங்க உடம்புக்கு இந்த நிலைமை வரும்னு நான் எதிர்பார்க்கவே இல்லை.... என்ன ஆகுமோ...''

தாமரைச் செல்வனுக்கு கண்களில் கண்ணீர் தளும்பியது.

''நீங்களே இப்படி தைரியம் இல்லாமே



பேசினா எப்படி தாமரை...? தைரியமா இருங்க... உங்க தங்கைகள் உடனே வரப்போறாங்களா இல்லையா?''

''ரெண்டு பேருமே நாளைக்கு வந்திடுவாங்க.... நீ கொஞ்சம் டெய்லி ஈவினிங் வந்திட்டு போ உஷா... அப்பத்தான் நான் கொஞ்சமாவது தைரியமா இருப்பேன்...''

''நோ ப்ராப்ளம், நான் டெய்லி அரை மணி நேரம் வந்து இருந்திட்டுப் போறேன்...''

''ரெண்டு மூணு மாசத்ல நம்ம கல்யாணத்தை வச்சிடணும்னு நேத்துதான் சொல்லிட்டு இருந்தாங்க. அதுக்குள்ளே இப்படி ஆயிடிச்சு...''

''அம்மாவை எப்ப ஆஸ்பிட்டல்லே அட்மிட் பண்ணினீங்க...?''

தாமரைச் செல்வன் நேற்று நடந்தவற்றை விவரித்துச் சொன்னான். அப்போது வங்கியில் பணியாற்றுகிற நண்பர்களும் வந்து விடவே உஷா விடை பெற்றுக் கொண்டாள்.

''நான் நாளைக்கு சாயந்தரம் வர்றேன் தாமரை. நீங்க நாளைக்குக் காலையில் ஒரு தடவை போன் பண்ணி டாக்டர் என்ன சொன்னாங்கன்னு சொல்லுங்க. முடிஞ்சா காலையில் பேங்குக்கு போறதுக்கு முந்தி ஒரு தடவை வந்து பாக்கிறேன். உங்களுக்கு எதுவும் வேணும்னா சொல்லுங்க. நாளைக்கு வரும்போது வாங்கிட்டு வரேன்.''

''ஒண்ணும் வேண்டாம் உஷா. எதுவும் வேணும்னா நாளைக்குச் சொல்றேன்.''

''வரட்டுமா? தைரியமா இருங்க.''

''முடிஞ்சா காலையில வா உஷா. முடியலைன்னா வேணாம்.''

''பாக்கலாம். காலையில உங்க தங்கைகள் வந்திடுவாங்க- இல்லையா?''

''ஆமா-வந்திடுவாங்க.''

''ஓ.கே.... ஸியூ.''

---

# 18

---

''ஏன் லேட்டா வர்றே?'' வீட்டில் நுழைந்தபோது உஷாவின் அம்மா கேட்டாள்.

''மயிலாப்பூர் வரைக்கும் போயிட்டு வர்றேன்.''

''எதுக்கு?''

''தாமரைச் செல்வனோட அம்மாவுக்கு பேராலிசிஸ் அட்டாக் வந்து மஞ்சுளா மருத்துவமனையில் அட்மிட் பண்ணி யிருக்காங்க. அவங்களைப் பார்க்கறதுக்குப் போயிருந்தேன்.''

உஷாவின் அம்மா இதை எதிர்பார்க் காததால் சிறிது திடுக்கிட்டுவிட்டாள்.

ஆகையால் தொடர்ந்து என்ன கேட்பதென்று தெரியாமல் மௌனமாக இருந்தாள். உஷாவும் மௌனமாகவே பாத்ரூம் போய் முகம் கழுவிவிட்டு வந்தாள். அகிலாவும் மௌனமாகவே மகளுக்குக் காப்பியை கலந்து கொண்டு வந்து கொடுத்



தாள். ஏனோ- அகிலாவுக்கு உஷாவின் முகத்தைப் பார்க்க கூச்சமாக இருந்தது. காப்பியைக் கொடுத்துவிட்டுக் கேட்டாள்:

''எப்படி இருக்காங்க அந்த அம்மா?''

''இன்டென்சிவ் கேர் யூனிட்லதான் வச்சிருக்காங்க... இன்னும் ரெண்டு நாள் ரண்டனும் போலிருக்கு... இப்போ எதுவும் டாக்டர்ஸ் நிச்சயமா சொல்லலையாம்.''

''நேரம் சரியில்லை அந்தப் பையனுக்கு! வேறென்ன?''

உஷா பெருமூச்சு விட்டாள். அவளின் அம்மா தொடர்ந்து சொன்னாள்.

''ரொம்ப கெட்ட சகுனம் இது அந்தப் பையனுக்கு... அதை மட்டும் ஞாபகம் வச்சிக்க... இதனால்தான் இப்படி நடந்திருக்கு...''

வீட்டு மொட்டை மாடியில் போய் உஷா, அம்மா சொன்ன இந்த வார்த்தைகளையே நினைத்துக் கொண்டிருந்தாள். உண்மையில் இது கெட்ட சகுனம்தானா?

-கெட்ட சகுனம் என்றால் எந்த விதத்தில்? உஷாவால் எந்த முறையிலும் யோசிக்க முடியவில்லை. தாமரைச் செல்வனுக்கு இந்தக் கஷ்டம் வந்திருக்க வேண்டாம் என்று அவளின் மனம் திரும்பத் திரும்ப நினைத்தது. அவனுடைய அம்மா இந்த ஆபத்தில் இறந்து போய்விட்டால்? தாமரைச் செல்வன் வாழ்க்கையில் வேறு விதமான நிம்மதிக்குறைவு ஏற்படாது. அந்த அம்மா உயிர் பிழைத்து; ஆனால் பல மாதங்களுக்கு

சகஜமான உடல் நிலையில் வாழ முடியாமல் முடங்கிப் போய்விட்டால்? அமைதிக் குறைவில் இருந்து தப்பிக்க தாமரைச் செல்வனுக்கு வழி கிடையாது. அவனின் வாழ்க்கையில் இயல்பான இயக்கம் கூட முடங்கிவிடும்.

உஷா யோசித்துக் கொண்டே இருந்தாள். தனது பெற்றோர்களைத் தாண்டி, தாமரைச் செல்வனை மணந்து கொள்ளப் போகிற தன்னுடைய தாம்பத்ய வாழ்க்கையின் அன்றாட சகஜ வாழ்க்கையையும் முடக்கம் பாதிக்குமா என்ற கேள்வி அவளுள் எழுந்தது.

இந்தக் கேள்வி உஷாவைச் சிறிது தீவிர யோசனையில் ஆழ்த்தியது. யோசனையின் முடிவில் கவலையும் வந்தது. அம்மா சொல்கிற மாதிரி இது ஒரு கெட்ட சகுனம் தானா?

ஆனால், எந்த விதத்தில் கெட்ட சகுனம் என்று தெளிவாகத் தெரியாமல் உஷா இரவு பூராவும் அநேகமாக தூங்காமலேயே படுக்கையில் புரண்டிருந்தாள்.

காலையில் வங்கிக்குப் போவதற்கு முன் ஆட்டோ பிடித்து மருத்துவமனைக்குப் போனாள். தாமரைச் செல்வனின் இரண்டு தங்கைகளும் வந்திருந்தார்கள். தாமரைச் செல்வன் தங்கைகளை உஷாவிற்கு அறிமுகம் செய்து வைத்தான். அந்தப் பெண்கள் கவலையுடன் சிறு புன்னகை காட்டினார்கள். தாமரைச் செல்வனும் உஷாவும் நகர்ந்து முன் வராந்தாவிற்கு



வந்தார்கள்.

''அம்மா எப்படி இருக்காங்க?'' உஷா மெல்லிய குரலில் கேட்டாள்.

''இம்ப்ருவ்மெண்ட் இல்லை உஷா... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு...''

''நேத்திக்கி எங்க அம்மாகிட்டே சொன்னேன் - இந்த மாதிரி உங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு...''

''என்ன சொன்னாங்க?''

''ஒண்ணும் சொல்லலை.''

''திடீர்னு வாழ்க்கை இப்படி பிரச்னைக்கு உரியதா ஆயிடுச்சே உஷா... அம்மா உடம்பு என்னைக்குக் குணமாகி - என்னைக்கு நீயும் நானும் கல்யாணம் பண்ணிக்கிறது...? எனக்கு ஒண்ணுமே புரியலை.''

''முதல்ல அம்மா உடம்பு சரியாகட்டும்.''

''இல்லை உஷா... எங்கேயோ ஒரு கோணல் ஏற்பட்டுட்ட மாதிரி தெரியுது எனக்கு... ஏதோ உடம்பு சரியில்லே என்கிற மாதிரியே இல்லையே அம்மா நிலைமை. வெரி சீரியஸ் ப்ராப்ளம். பிழைப்பாங்களா இல்லையான்னு தெரியலை.

பிழைச்சு எந்திரிச்சாலும் - பக்கவாதத்தோட பாதிப்பு எந்த அளவுக்கு இருக்கும்னு தெரியலை. டிஸ்சார்ஜ் ஆகிப் போனாலும்கூட அம்மாவை எப்படி - யாரோட துணையோட கவனிச்சுப்பேன்?''

''உங்க தங்கைகள் வந்து கொஞ்சநாள் இருக்க மாட்டாங்களா?''

"அவங்க அவங்களுக்குக் குடும்பம்னு ஏற்பட்டுட்ட பிறகு அப்படியெல்லாம் வந்து ஒரேடியாக தங்கிட முடியுமா? என்னதான் பண்ணப் போறேனோ...!"

உஷா மௌனமாக இருந்தாள்.

"நீ தான் உஷா, எனக்குத் துணையாக இருக்கணும்... ரெண்டு நாளா தூக்கமே கிடையாது எனக்கு... அம்மா உடல்நிலையில அபிவிருத்தி தெரிஞ்சா உடனே நாம ப்ளான் பண்ணி ஒரு தேதி பார்த்து ரிஜிஸ்டர் ஆபீஸ்ல கல்யாணம் பண்ணிடறது பெட்டர்... அப்பத்தான் எனக்கு தைரியமே வரும்..."

"முதல்ல அம்மா உடம்பு கொஞ்சம் பெட்டர் ஆயிடட்டும்... அப்புறம் யோசிப்போம்."

"ப்ளீஸ்- சீக்கிரம் நீ நம்ம கல்யாணத்துக்குத் தயாராயிடு உஷா... என்னென்ன ரகசிய ஏற்பாடுகள் செய்யணுமோ- அதையெல்லாம் செய்ய ஆரம்பிச்சிடு..."

-அப்போது தாமரைச் செல்வனின் தங்கை அவனைத் தேடி வேகமாக வந்தாள்.

"அண்ணா, அண்ணா! உன்னை பெரிய டாக்டர் கூப்பிடறார்..."

"இரு உஷா; இதோ வந்திடறேன்..."

உஷா வராந்தாவில் தனியாக நின்றாள். பத்து நிமிடங்களில் திரும்பி வந்த தாமரைச் செல்வன் முகம் மலர்ந்திருந்தது.

"உஷா... அம்மாவோட கண்டிஷன் கொஞ்சம் பெட்டராம். உயிருக்கு ஆபத்தான



நிலைமையில் இருந்து தப்பிட்டாங்கன்னு டாக்டர் சொன்னார்... இனிமே உயிருக்கு ஆபத்து இல்லை... தப்பிச்சேன்..."

தாமரைச் செல்வன் சந்தோஷத்துடன் சொன்னான். அவனுடைய நெஞ்சில் கவிந்திருந்த இறுக்கம் விலகியிருந்தது.

"இன்டென்சிவ் கேர் யூனிட்ல இருந்து வெளியே கொண்டு வந்திடுவாங்களா?" - உஷா கேட்டாள்.

"அது தெரியலை... இம்ப்ருவ்மெண்ட் வேகமா தெரிஞ்சா நாளைக்கு ஸ்பெஷல் ரூமுக்கு கொண்டு வந்திடுவாங்க..."

"ஒரு விஷயம் கேக்க மறந்திட்டேன் தாமரை. அம்மாவுக்கு பேராலிசிஸ் உடம்புல எந்தப் பாகத்தை பாதிச்சிருக்கு?"

"வலது பக்கம்... வலது கையும் வலது காலும் விழுந்திருச்சி..."

"பிழைச்சிட்டாங்களே - அதை நினைச்சிக் கடவுளுக்கு நன்றி சொல்லிக்க வேண்டியதுதான்... நம்ம கையில் என்ன இருக்கு?"

- இதைச் சொல்லிவிட்டு உஷா ஒரு நிமிடம் மௌனமாக யோசித்தாள். இந்த வார்த்தைகளைத் தான் உண்மையான சந்தோஷத்தில் சொல்லவில்லை என்பது அவளுக்கே தெரிந்தது. அந்த உண்மையை தாமரைச் செல்வனும் தெரிந்து கொள்ளக் கூடாது என்ற நினைப்பில் அவசர அவசரமாக அவனிடம் விடை பெற்றுக் கொண்டாள்.

''ஈவினிங் கண்டிப்பாக வா உஷா.''

''கண்டிப்பா வரேன்...''

ஆட்டோவில் வங்கி நோக்கி விரைந்து கொண்டிருந்த உஷாவின் மனசு வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. தாமரைச் செல்வனின் அம்மாவின் உயிருக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தான நிலைமை சற்று நீங்கியிருக்கிறது என்ற செய்தியைத் தான் ஏன் ஒரு அந்நிய நிலையில் வாங்கிக் கொண்டோம் என்ற கேள்வியும், அந்தச் செய்தியில் தனக்கு ஏன் உண்மையான சந்தோஷம் ஏற்படவில்லை என்ற கேள்வியும் மாறி மாறி அவளின் அந்த மன இயக்கத்தில் உருண்டு கொண்டிருந்தன.

## 19

**உ**ஷாவின் மனநிலையில் தெளிவற்ற காட்சிகள் தோன்றித் தோன்றி அழிந்து கொண்டிருந்தன. அவளில் வினோதமான நிசப்தம் குடி கொண்டிருந்தது. எப்போதுமே அவளின் எண்ணம் எங்கோ புதைந்திருந்தது. முழங்கால்களில் முகத்தைப் புதைத்தபடி அமர்ந்திருந்தாள். மொட்டை மாடிச் சுவரில் சாய்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தாமரைச் செல்வன் விஷயத்தில் அவளுள் சிலிர்த்திருந்த சிலிர்ப்பு எங்கோ காணாமல் போய் விட்டிருந்தது. என்ன யோசிக்கிறோம் என்பது



தெரியாமலேயே உஷாவின் பிரக்ஞை யோசனையிலேயே மூழ்கிப் போயிருந்தது.

தொடர்ந்து சில நாட்களில் மருத்துவமனைக்குப் போய் தாமரைச் செல்வனின் அம்மாவின் உடல்நிலையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற முன்னேற்றத்தைப் பார்க்கின்ற விருப்பம்கூட அவளுக்கு வரவில்லை. யந்திர நிலையில் போனாள். யந்திர நிலையில் தாமரைச் செல்வனுடன் பேசிக் கொண்டிருந்தாள். அம்மாவின் உடல் நிலையில் ஏற்பட்டு வருகிற முன்னேற்றத்தைப் பற்றி சந்தோஷமாகப் பேசுகிற தாமரைச் செல்வனின் வார்த்தைகள் எதுவும் உஷாவின் மனதில் பதிவாகவில்லை.

அவள் ஏதோவொரு திக்பிரமையில் சஞ்சரிப்பதைக் கண்டுவிட்ட கிருஷ்ணசாமி உஷாவின் மௌனத்தில் குறுக்கிடவில்லை. மகளின் மிக நீண்ட மௌனத்தை - மனைவியின் மூலம் தெரிய வந்த தாமரைச்செல்வனின் அம்மாவுக்கு ஏற்பட்டிருக்கும் பக்கவாதப் பிரச்னையோடு தொடர்புபடுத்தி மனதிற்குள் கிருஷ்ணசாமி மகிழ்ச்சி அடைந்தார். உஷாவின் மௌனம் அவருக்குச் சாதகமான அறிகுறியாகத் தென்பட்டதால் கிருஷ்ணசாமி அவளை எந்தக் கேள்வி கேட்பதையும் தவிர்த்துக் கொண்டு மகளை மிகவும் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். தாமரைச் செல்வனைப் பற்றி உஷாவிடம் மறந்து போய்கூட எந்தக் கேள்வியையும் கேட்கக் கூடாது என்று மனைவியிடமும் மறக்காமல்

சொல்லி வைத்திருந்தார். ஆகையால், எல்லாமே ஊமைக் காட்சிகளாக சுழன்று கொண்டிருந்தன.

ஒரு நாள் உஷா மருத்துவமனைக்குப் போயிருந்தபோது தாமரைச் செல்வனே அவளைக் கேட்டுவிட்டான்.

''உஷா! ஏன் நீ கொஞ்ச நாளா ஒரு மாதிரியாகவே இருக்கே?''

''அப்படியெல்லாம் இல்லையே!''

''நீ கலகலப்பாகவே இல்லை. டல்லா இருக்கே...''

''ஆஸ்பத்திரியிலே எப்படி தாமரை நான் கலகலப்பா இருக்க முடியும்...? உங்க அம்மாவுக்கு வந்த பிரச்னையென்ன சாதாரணமானதா?''

''அம்மாதான் நல்லா ஆயிட்டு ...ர்றாங்களே... அப்புறமென்ன?''

''நல்லா ஆகி என்ன பயன்? ஒரு கால், ஒரு கை உபயோகம் இல்லாமே போச்சே...''

''அதனால என்ன உஷா.... அம்மாவுக்கு நானும் நீயும் தான் இருக்கோமே - கையும் காலுமா...''

''நாம எவ்வளவுதான் செய்தாலும் - கால், கை உபயோகம் இல்லாமே போனது போனதுதானே... அந்த கஷ்டம் கஷ்டம் தானே...''

''நீயும் எங்க வீட்டுக்கு வந்திட்டா - அந்தக் கஷ்டத்தை அம்மாவும் தாங்கிப்பாங்க. நானும் தாங்கிப்பேன். உஷா! அம்மாவை டிஸ்சார்ஜ்



பண்றப்ப நீயும் வந்திடு... அதுக்கு மேலேயு நீ லேட் பண்ணினா, என்னாலேயும் தாங்க முடியாது. அம்மாவாலேயும் தாங்க முடியாது அவ்வளவுதான் சொல்வேன்...''

''அம்மாவை என்னைக்கி டிஸ்சார்ஜ் பண்ணுவாங்க...?''

''அது தெரியலை... அதுக்கெல்லாம் இன்னும் கொஞ்ச நாள் ஆகும்... ஆனா - அதுக்கு முன்னாடியே நீ நம்ம கல்யாணத் தேதியை நிச்சயம் பண்ணிடறது நல்லது... உன்னோட துணை எனக்கும், உன்னோட சேவை அம்மாவுக்கும் இம்மீடியட்டா தேவை... டிஸ்சார்ஜ் ஆன பிறகு நீ - லீவ் போட்டுட்டு ரெண்டு மாதம் அம்மாவைப் பார்த்துக் கொள்றது நல்லது. நீ ஆபீசுக்கு வந்திட்டு அம்மாவையும் பார்த்துக் கொள்றது முடியாத காரியம்.... நமக்குத் துணையாக அப்ப எங்க அத்தை, எங்க சித்தி, என் ரெண்டு தங்கச்சிகள் வந்து வந்து இருந்துப்பாங்க... சமாளிச்சிடலாம்... என்ன சொல்றே...?''

உஷா பதில் சொல்லாமல் யோசனையில் ஆழ்ந்தாள்.

''யோசி யோசி. எவ்வளவு நாளைக்குத்தான் நீ யோசிக்கறேன்னு பார்த்திடறேன். ஆனா ஒண்ணு உஷா - அம்மா டிஸ்சார்ஜ் ஆகிற தேதி சொல்லிட்டாங்கன்னா - உன்னை யோசிக்க விடமாட்டேன். நானே தாலியை எடுத்து உன் கழுத்துல கட்டிடுவேன்... பார்த்துக்க'' - தாமரைச் செல்வன் எரிச்சலோடு சொன்னான். உஷா உள்ளுக்குள் சிறிது

அதிர்ந்தாலும், வெளிக்குப் பொய்யான சிரிப்பைக் காட்டிவிட்டு வீட்டுக்குக் கிளம்பினாள்.

## 20

மறுநாள் மாலை உஷா மருத்துவ மனைக்குச் செல்லவில்லை. அவளுடைய மனநிலையில் ஒரு விலகல் ஏற்பட்டிருந்தது. 'தாமரைச் செல்வனுடன் மேற்கொள்கிற மணவாழ்க்கை, அவனுடன் அமைத்துக் கொள்கிற காதல் வாழ்க்கையாக இல்லாமல் அவனுடைய அம்மாவிற்கு பணிவிடை செய்கிற செவிலி வாழ்க்கையாக மாறிப் போய் விடுமோ?'

'பெற்றோரின் விருப்பத்தையும் மீறி செய்து கொள்கிற திருமணம் ஒரு பக்கவாத நோயாளியை இரவும் பகலும் கவனித்துக் கொள்கிற பணிவிடையை நோக்கித்தானா?'

உஷாவின் ஒரு மனமும், உஷாவின் மற்றொரு மனமும் எதிர் எதிராக நின்று கேள்விகள் எழுப்பிப் பதில்கள் கொடுத்துக் கொண்டிருந்தன.

**''நன்றாக யோசித்துக் கொள் உஷா... கை கால் விளங்காத மாமியாரை அல்லும் பகலும் பார்த்துக் கொண்டும் பணிவிடை செய்து கொண்டும் இருக்கத்தான் உனக்கு நேரம் சரியாக இருக்கும்...**



காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட இன்பச் சிலிர்ப்புக்கும், சுதந்திரத்திற்கு உனக்குச் சந்தர்ப்பமே இருக்காது. போயும் போயும் இதற்குத்தானா இந்தக் காதல் கல்யாணம் உனக்கு?''

''அப்படியானால் தாமரை செல்வனுடன் எனக்கு ஏற்பட்ட காதல்?''

''இளமையில் யார் தான் காதலிக்க வில்லை? காதலித்தவனைத் தான் ஒரு பெண் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் எத்தனையோ பெண்களுக்குக் கல்யாணமே ஆகாமல் போய்விடும்.''

'இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?''

''தாமரைச் செல்வனின் அம்மா உடல் நிலை உன் திருமண வாழ்வின் சந்தோஷத்திற்குப் பாதகமாகத்தான் இருக்கும். வயதான காலத்தில் பக்கவாதத்திற்கு ஆளாகும் பெண்மணி நிச்சயமாக உனக்கு ஒரு சுமைதான். ஒரு இரும்பு விலங்குதான். உன் எண்ணத்தை மாற்றிக் கொள். தாமரைச் செல்வனை நீ மணந்து கொள்ள வேண்டாம். இரண்டு கண்களையும் திறந்து வைத்துக் கொண்டே கிணற்றில் விழாதே...''

''தாமரைச் செல்வனை நீ கல்யாணம் செய்து கொள்வது கூட உன்னுடைய பெற்றோர்களுக்கு நீ செய்கிற துரோகம் தானே...?''

''என் மனம் ஒரேடியாகக் குழம்புகிறது...''

''தாமரைச் செல்வனை மணந்தால் உன் வாழ்க்கையே குழம்பிப் போய்விடும் உஷா.''

''நான் அவரை மணக்க மறுத்தால் அவருடைய வாழ்க்கை குழப்பமடைந்துவிடுமே...''

''அந்தக் கவலை இருந்தால் அவனுக்காக தியாகம் செய் - உன் வாழ்க்கையை. தாமரைச் செல்வனையே கல்யாணம் பண்ணிக் கொள். காலத்துக்கும் அவனுடைய அம்மாவை பார்த்துக் கொண்டிரு - போ...''

''என் மனம் அதற்கும் பயப்படுகிறது.''

''வேறு வழியில்லை உஷா. இரண்டில் ஒரு பட்டத்தை நீ பெற்றுத்தான் தீர வேண்டும். அவனை மணந்தால் தியாகி! மணக்கா விட்டால் துரோகி!''

''நான் துரோகியோ, தியாகியோ - இல்வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிஷமும் ஆனந்தமாக இருக்க வேண்டும். அதுவும் புதுமண வாழ்க்கை பொங்கிப் பூரித்துப் போகக் கூடியதாக இருக்க வேண்டும்...''

''தாமரைச் செல்வனோடு உனக்கு ஏற்படுகிற புதுமண வாழ்க்கை எப்படிப் பொங்கிப் பூரிக்கத் தக்கதாக இருக்கும் என்று நீ எதிர் பார்க்கிறாய்...? அவனின் அம்மா இப்போதுதான் பக்கவாதத்தில் தாக்கப்பட்டு கிழிந்த நார் போல



கிடக்கிறாள்...''

''அப்படியானால் நான் என்ன செய்யட்டும்?''

''தாமரைச் செல்வனுக்கு 'குட் - பை' சொல்லிவிடு.''

''பயமாக இருக்கிறது.''

''இது உன் வாழ்க்கை. ஊரார் வாழ்க்கை இல்லை...''

''தாமரை மிகவும் கஷ்டப்படுவாரே...''

''அவனுக்கு கஷ்டம் இப்போதே ஆரம்பித்துவிட்டது. நீயா பொறுப்பு இதற்கு? தாமரைச் செல்வனும் வேறொரு பெண்ணைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான்.''

''அப்படியானால் 'குட் பை' சொல்லிவிட வேண்டியதுதானா?''

''தயங்காமல் சொல்லிவிடு.''

உஷாவுக்கு வியர்த்துக் கொட்டியது. அவளுடைய முடிவு அவளுக்கே வெட்கமாக இருந்தது. அசிங்கமாக இருந்தது. முடிவை எப்படி வெளியிடப் போகிறோமோவென்று தயக்கமாகவும் இருந்தது. இப்படியொரு நிலைமை வந்துவிட்டதே என்று வேதனையாகவும் இருந்தது. துக்கத்தில் உஷாவின் கண்கள் கலங்கிவிட்டன. தானே தாமரைச் செல்வனை இழப்பதற்குத் தயாராகிவிட்ட அவமானத்தில் அவளுக்கு அழுகையே வந்தது. தாமரைச் செல்வனின் அம்மா இறந்து போயிருந்தால் இந்தப் பிரச்னையே வந்திருக்காதென்று தோன்றியது. தனக்கு

அதிர்ஷ்டம் இல்லையென்று நினைத்தாள். தன்னுடைய மனத்திருப்பம் தனது பெற்றோர்களுக்கு மறைமுகமாக வெற்றியாக இருக்கும் என நினைத்தபோது உஷாவால் தாங்கவே முடியவில்லை. மொத்த வாழ்க்கையிலும் தான் தோற்றுப் போய் விட்ட கலக்கம் வந்தது. அந்தக் கலக்கத்தில் பேசாமல் தாமரைச்செல்வனையே கல்யாணம் செய்து கொள்ளலாமாவென்ற நேர் எதிரான சிந்தனையும் மனதில் தோன்றியது. ''அவனைக் கல்யாணம் செய்து காலத்துக்கும் பக்கவாதம் வந்த அவனுடைய அம்மாவுக்குப் பணிவிடை செய்து கொண்டிருப்போமே; என்ன இப்போது? புதுமண வாழ்க்கை பொங்கிப் பூரிக்க வேண்டும் என்பது சட்டம் எதுவும் இல்லையே! காதலுக்காக கஷ்டம்தான் படுவோமே! வாழ்க்கையையே அவனுக்காக தியாகம் செய்வோமோ!''

உஷா, தாமரைச் செல்வனை நினைத்தாள். அவன் வேறு மாதிரி சொல்லி இருக்கலாம்.

''வயதான காலத்தில் பக்க வாதத்துக்கும் ஆளாகி படுத்து படுக்கையாய் கிடக்கப் போகிற என் அம்மாவுக்கு காலத்துக்கும் நீ தான் பணிவிடை செய்து சேவை செய்து கொண்டிருக்க வேண்டும். உஷா... என் கடமை - நான் என் அம்மாவை பார்த்துக் கொள்கிறேன். என்னைக் கல்யாணம் செய்து கொண்டு, பாவம்... நீயும்



கஷ்டப்பட வேண்டாம்... எனக்காக உன் சந்தோஷங்களை தியாகம் செய்ய வேண்டாம்... என்னை மறந்துவிடு...'' என்கிற பாணியில் சொல்லி யிருந்தால் உஷாவின் மனம் நெகிழ்ந்து போய் தாமரைச் செல்வனுக்குச் சாதகமாக செயல்பட்டிருக்கும்....

ஆனால், தாமரைச் செல்வன் அந்த மாதிரியெல்லாம் சொல்லவில்லையே...!

உஷா யோசித்துக் கொண்டே' இருந்தாள். அவனே தாலியை எடுத்து அவளுடைய கழுத்தில் கட்டிவிடப் போவதாக அலவா எரிச்சலுடன் சொன்னான்.

காரணம்?

அவனுடைய சுயநலம்! உஷா அவனைக் கல்யாணம் செய்து கொண்டு அவனின் அம்மாவைக் கண்ணை இமை காப்பது போலக் காக்க வேண்டும்!

உஷாவின் மனம் வன்மையாக இதை மறுத்துவிட்டது. அவனுடைய அம்மா படுத்த படுக்கையாகிவிட்டபோது தாமரைச் செல்வனை மணப்பது சாத்தியமில்லை என்ற தீர்மானம் எந்தக் கேள்விக்கும் அப்பாற்பட்ட இறுதி முடிவாக அவளுள் பாய்ந்து விட்டது. இந்த முடிவை எப்போது அவனிடம் வெளிப்படுத்துவது? எப்படி வெளிப் படுத்துவது?

உஷாவின் இப்போதைய யோசனை - இது தான்.

# 21

தொடர்ந்து மூன்றாவது நாளும் மருத்துவமனைக்கு வராமல் போனதில் பயந்து போன தாமரைச் செல்வன், மறுநாள் காலை அவசரமாக வங்கிக்கு போன் செய்து உஷாவைக் கூப்பிட்டான். உஷா உடனே எழுந்து வரவில்லை. போனின் மறுமுனையில் அவளுடைய குரலுக்காக காத்திருந்த தாமரைச் செல்வனுக்கு ஒவ்வொரு விநாடியும் மிகக் கனமாகக் கழிந்து கொண்டிருந்தது. குற்றம் கலந்த மனநிலையுடன் உஷா தயங்கித் தயங்கி சிறது தாமதப்படுத்தியே எழுந்து வந்தாள்.

''உஷா... என்ன மூணு நாளாக வரவே இல்லை?''

''ரெண்டு நாளா கொஞ்சம் உடம்பு சரியில்லை. அதனால நேரா வீட்டுக்குப் போயிட்டேன்'' - பொய் சொன்ன உஷாவுக்கு தன் குரலே தன்னுடையது இல்லை என்ற பிரமை வந்தது. அத்தனை அந்நியமாக ஒலித்தது அவளின் குரல்.

''ஏன் உன் குரலே ஒரு மாதிரியா இருக்கு?'' - தாமரைச் செல்வன் விடாமல் கேட்டான். அவன் அப்படிக் கேட்டது உஷாவிற்குப் பிடிக்கவில்லை.

''அதான் சொன்னேனே - உடம்பு சரியில்லையின்னு...''

''இன்னிக்கிக் கொஞ்ச நேரமாவது வந்திட்டுப் போ உஷா. ஈவினிங் கொஞ்ச நேரமாவது நீ வந்திட்டுப் போனாத்தான்



எனக்கு ஆறுதலாக இருக்கு. நீ வரலேன்னா ரொம்ப டல்லாயிடுது.. ஆஸ்பிட்டல் அட்மாஸ்பியரே பிடிக்கலை...''

''ஈவினிங் முடிஞ்சா வரேன் - நான் வரலேன்னா கோபப்படாதீங்க. என் நிலைமை அப்படி...!''

''ஏன் - வீட்ல எதுவும் ப்ராப்ளமா?''

''டெய்லி உங்க அம்மாவைப் பார்க்க நான் ஆஸ்பத்திரிக்கு வந்தது எங்க அப்பா அம்மாவுக்குப் பிடிக்கலை.''

''உங்க அப்பா அம்மாவுக்கு என்னையே பிடிக்கலை... சரி; எப்படியாவது இன்னிக்கு ஈவினிங் வா...''

''ஸாரி, முடிஞ்சாத்தான் வருவேன் தாமரை...''

''ஸாரி உஷா, நீ இப்படி சொல்றது எனக்குப் பிடிக்கலை...! எவ்வளவு சீரியஸா 'வா'ன்னு சொல்றேன். 'முடிஞ்சாத்தான் வருவேன்'னு சொல்றியே...! ஸாரி; யூ மஸ்ட் கம்! நம்ம கல்யாணத்துக்கு தேதி குறிச்சாகணும்...''

''உங்க அம்மா இப்படி இருக்கும்போதே?''

''அம்மா இப்படி இருக்கிறதாலேதான் உடனே தேதி குறிச்சாகணும்...! கல்யாணமாகி நீ எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமா எங்க வீட்டுக்கு வர்ரீயோ - அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது...''

உஷா மௌனமாக இருந்தாள்.

''என்ன, ஒண்ணும் சொல்ல மாட்டேன் கிறே...?''

''ரெண்டு மூணு நாள் கழிச்சு வந்து சொல்றேன்...''

''இன்னிக்கு வாயேன்...''

''இன்னிக்கு என்னால வர முடியாதுங்க. ஐ'ம் நாட் ஃபீலிங் வெல்...''

''வேடிக்கைதான். ஆபீஸ் வர முடியுது. ஆஸ்பிட்டலுக்கு வர முடியலையா?''

-தாமரைச் செல்வன் பொறுக்க முடியாமல் கேட்டான். இந்தக் கேள்வி உஷாவுக்கு எரிச்சலைத் தந்தது. எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னாள்.

''சரி நாளைக்கு வரேன்...''

''நாளைக்கு கல்யாணத் தேதி ஃபிக்ஸ் பண்ணிடணும்...''

கெடு வைப்பது போல தாமரைச் செல்வன் சொன்னான்.

உஷா சிறிது தயங்கிவிட்டு சொன்னாள். ''சரி...''

''தேங்க்யூ வெரிமச்...''

உஷா பெருமூச்சுடன் ரிசீவரை வைத்தாள். இந்தத் தொலைபேசி உரையாடலே அவளுக்கு ஆயாசமாக இருந்தது! 'உடனே தேதி குறித்தாக வேண்டுமாம்!

ஏனென்றால் நான் இவர்களின் வீட்டுக்கு வந்து அம்மாவுக்கு ஓடி ஓடி பணிவிடை செய்தாக வேண்டும். இவர்களின் அம்மாவுக்கு பணிவிடை செய்ய நான் உடனே இவரைக் கல்யாணம் பண்ணியாக வேண்டும்...! வேறு வேலை இல்லை எனக்கு...! ஏதோ இவர் மேல் காதல் வயப்பட்டேன். இல்லையென்று சொல்லவில்லை! அதற்காகக் காலத்துக்கும் ஒரு பக்கவாதம் வந்த பெண்மணிக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்க நான் தயாரில்லை! யெஸ் - நான் அப்படிப்பட்ட தியாகி இல்லை நண்பா! குட் பை...!'

தீர்மானத்தை எப்படி செயல்படுத்துவது என்ற கண்டுபிடிப்புடன் உஷா தன்னுடைய இடத்தில் வந்து உட்கார்ந்தாள்.



# 22

''அப்பா, நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்...'' உஷா பீடிகையோடு ஆரம்பித்தாள்.

''சொல்லும்மா...''

''தாமரைச் செல்வனோட அம்மாவுக்கு பேராலிசிஸ் அட்டாக் வந்து மருகளா ஆஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருக்காங்க...''

''கேள்விப்பட்டேன் - உங்க அம்மா சொன்னா...!''

''அதனால லீவ் போட்டுட்டு தாமரை ஆஸ்பிட்டல்ல இருந்து அவரோட அம்மாவை பார்த்துக்கிட்டு இருக்கார்... நாளைக்கு ஆஸ்பிட்டலுக்கு வர்றதா நான் சொல்லி இருந்தேன், ஆனா, எனக்குப் போறதுக்குப் பிடிக்கலை... அதனால, நீங்க என் சார்பா போய் ஒரு முக்கியமான விஷயத்தை அவர்கிட்டே சொல்லிட்டு வரணும்... யோசிச்சுப் பார்த்ததில் திடீர்னு எனக்கு அவரைக் கல்யாணம் செய்து கொள்ளப் பிடிக்கலைப்பா! ஆயுளுக்கும் இனி அவரோட அம்மா, ஒரு கை கால் விளங்காத நோயாளியாக இருக்கப் போகிற நிலைமையில் தாமரைச் செல்வன்கூட அமைதியா - நிம்மதியா என்னால வாழ முடியாதுப்பா...! அது ஒரு கமிட்மெண்ட் மாதிரி ஆயிடும்! அன்றாட வாழ்க்கையில் சந்தோஷமே பறி போயிடும்னு தோணுது. அதனால் அவரைக் கல்யாணம் பண்ணிக்க

வேண்டாம் என்கிற முடிவுக்கு வந்துட்டேன்... இப்படிச் சொன்னா அவர் ரொம்ப அப்செட் ஆயிடுவாரோன்னு பயமா இருக்கு... அதனால் நான் போகலை. நீங்க போங்க... ஆனா இப்போ நான் உங்ககிட்டே சொன்ன உண்மையான காரணத்தை சொல்லாதீங்க... உங்களோட வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நான் அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் பிரியப்படலைன்னு பொய் சொல்லிடுங்க. என்னைக்காவது என்னை அவர் நேர்ல பார்க்கிறப்போ நானும் அதே பொய்யைச் சொல்லிடறேன்...!''

''உண்மைக் காரணம் எதுவா இருந்தாலும் நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதில்லை என்கிற முடிவுக்கு வந்தது ரொம்ப நல்ல விஷயம் உஷா! - இப்பவே போய் நீ சொன்ன மாதிரியே சொல்லிடறேன்...''

''இன்னொரு விஷயம்ப்பா...''

''சொல்லும்மா...''

''சீக்கிரமா எனக்கு எங்க கிண்டி கிளைக்கு ட்ரான்ஸ்ஃபர் வாங்கிக் குடுக்கறதுக்கு ஏற்பாடு பண்ணுங்க...''

''டோண்ட் வொர்ரி! உடனே அதுக்கும் ஏற்பாடு பண்றேன்...''

''ஜாக்கிரதையா பேசுங்கப்பா; உண்மைக் காரணத்தை ஊகிக்கவே கூடாது!''

''உனக்குத் தெரியாதா உஷா - என் பேச்சுத்திறன்...?''

''ரொம்ப நன்றிப்பா...''

''நீ எனக்கு நன்றியெல்லாம் சொல்ல வேண்டாம். நாங்க உனக்குப் பார்க்கிற வரனை மனப்பூர்வமா நீ கல்யாணம் செய்துகிட்டா போதும் எங்களுக்கு.''

''நீங்க பார்க்கிற வரனையே



பண்ணிக்கிறேன்ப்பா...''

''சரி: போய் தாமரைச் செல்வன்கிட்டே சொல்லிட்டு ஒரு மணி நேரத்லே வந்திடறேன்...''

கிருஷ்ணசாமி கிளம்பி மஞ்சுளா மருத்துவமனைக்கு விரைந்தார்.

## 23

**வா**ழ்க்கையை நோக்கித் திரண்டு வந்த இறுக்கம் கலைந்து விட்ட நிம்மதியில் உஷா பாத்ரூம் போய் ஒரு மாலைக் குளியல் குளித்தாள். புதிய நைட்டியை எடுத்து அணிந்து கொண்டாள். சிறிது நேரம் புத்தகங்களைப் புரட்டினாள். தொலைக் காட்சியைப் பார்த்தவாறே அப்பாவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். மனசாட்சியின் உறுத்தல் எதுவும் இல்லாமல் உஷாவின் மனம் இயல்பாக இருந்தது.

போய் ஒண்ணரை மணி நேரமாகியும் கூட கிருஷ்ணசாமி திரும்பி வரவில்லை. உஷாவிற்கு மனம் தொலைக்காட்சியில் லயிக்கவில்லை. தாமரைச் செல்வனுடன் கிருஷ்ணசாமி நடத்தும் உரையாடல் அவளின் கற்பனையில் ஓடிக் கொண்டே இருந்தது.

இரண்டு மணி நேரமும் கடந்து விட்டது. கிருஷ்ணசாமி திரும்பி வரவில்லை. உஷா விற்கு உட்கார்ந்திருக்கவே முடியவில்லை. வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்து கொண்டே இருந்தாள். ஏதேதோ கற்பனைகள் மனதில் புரண்டன. கிட்டத்தட்ட மூன்றரை மணி

நேரம் கழித்து, மிகவும் களைப்பான தோற்றத்தில் கிருஷ்ணசாமி வந்தார்.

மார்பு வேகமாக அடித்துக் கொள்ள, ஓடிப் போய் உஷா கேட்டாள்.

''என்னப்பா - இவ்வளவு லேட்?''

''இரு இரு - முதல்ல போய் குளிச்சிட்டு வரேன்'' என்று சொல்லியபடி கிருஷ்ணசாமி வேகமாக பாத்ரூம் நோக்கிப் போனார். பத்து நிமிடங்களில் குளித்து முடித்து டவலால் துடைத்தவாறே திரும்பி வந்தார்.

''நீ சொன்ன மாதிரியே அவனைப் பார்த்துச் சொல்லியாச்சி உஷா. பெற்றோர்களின் விருப்பத்துக்கு விரோதமா உன்னைக் கல்யாணம் செய்துக்க உஷா பிரியப் படலை. அவளை நீ மன்னிச்சிடு தாமரைச் செல்வா'ன்னு டைரக்ட்டா சொல்லிட்டேன். அவனும் உன்னோட முடிவை முழு மனசோட ஏத்துக்கிட்டான். 'உஷாவும் நேர்லே ஒரு நாள் உன்னைப் பார்த்து இதைச் சொல்வா'ன்னு சொன்னேன். 'அது அவசியமில்லை சார்; நான் உங்க வார்த்தையை நம்பறேன்'னு சொல்லிட்டான். அந்த நிமிஷத்லே நான் போன வேலை முடிச்சிருச்சி; ஒரு பார்மாலிட்டிக்கு அவனோட அம்மாவோட ஹெல்த் பற்றி ரெண்டு வார்த்தை கேட்டுட்டு எழுந்திருக்கலாம்னு நெனைச்சேன் - அப்பத்தான் கொஞ்சமும் எதிர்பாராத விஷயம் நடந்து போயிடுச்சு. ரெண்டு மூணு பேர் தாமரைச் செல்வனைத் தேடி வேகமாக வந்து அவனோட அம்மாவுக்குத் திடீர்னு ரொம்ப சீரியஸா இருக்கு; டாக்டர் அவனை உடனே வரச்சொன்னார்னு கூப்பிட்டாங்க. நானும் ஒரு மனிதாபிமானத்துக்கு எழுந்து தாமரைச் செல்வன் கூடவே போனேன். ஒரு மணி நேரம் நிறைய டாக்டர்கள் கடுமையா



எல்லா முயற்சியும் செய்தும் அவனோட அம்மாவைக் காப்பாத்த முடியலை. உயிர் போயிடுச்சு. அந்த இக்கட்டான நிலையில் அந்தப் பையனை விட்டுட்டு வர எனக்கு மனசு வரலை. அவன் கூடவே இருந்து அவனோட உறவுக்காரங்க நிறைய பேருக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லி ஒவ்வொருத்தரா வர ஆரம்பிச்சதும், அவனுக்கு ஆறுதலும் சொல்லிட்டு நான் - மெதுவா வரேன்... அதான் இவ்வளவு நேரம்.. சரி; நேரம் ரொம்ப ஆயிடுச்சி. எனக்குப் பசிக்குது- சாப்பாடு எடுத்து வை...'' கிருஷ்ணசாமி சாப்பிடுவதற்கு உள்ளே போனார்.

உஷா ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.

அவளின் எதிரில் வாழ்க்கையின் வண்ணம் மாறி அதன் பிரும்மாண்டம் மேலும் பன் மடங்கு விரிந்து எண்ணங்களுக்கு அப்பாற் பட்டதாக மின்னி அச்சுறுத்துவது போல ஜொலித்துக் கொண்டிருந்தது.

## முற்றும்.

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில்
அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர்
ஜி. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி.அசோகன். தொலைபேசி: 28544294